


# இலங்கைத் தமிழர்கள்

# Tamils from Sri Lanka

## History Culture and Tradition

Rita Fatmaharan

Arunandhayam Tamil School Publication









## முன்னுரை

அருண உதயம் தமிழ்ப் பாடசாலை முதல் செங்கதிராய் ஒளி சிந்திடும் தமிழ் ஞானக் கலை கல்விக் கூடமாக 1992ம் ஆண்டு யூலை மாதம் 1ம் திகதி முதல் பிளம்ஸ்டட்டில் (Plumstead) உள்ள திரித்துவ மெதடிஸ்ட் ஆலய இளையவர் மையத்தில் (Trinity Methodist Church Youth Centre) திருமதி இந்திராணி பெர்ணான்டோவை தலைமையாசிரியையாகக் கொண்டு திகழ்ந்து வருகிறது. ஏழு மாணவர்களுடன் தொடங்கப்பெற்ற இப்பாடசாலை இன்று பிளம்ஸ்டட்டிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் வசிக்கின்ற பல நூற்றுக்கணக்கான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தமிழ்க் கல்வி கலைகளை திறமையான முறையில் படிப்பதற்கான பாடசாலையாக அருண உதயம் தமிழ்ப்பாடசாலையைக் கருதுகின்றனர். அந்த அளவுக்குத் தமிழ் மொழிக் கல்விக்கும் தமிழ்க்கலைகளுக்கும் இப்பாடசாலை அரும்பணியாற்றி வருகிறது.

இன்று கிறீன்விச்சிலும் இலண்டன் நகரப்பகுதியிலும் வாழும் தமிழர்களின் எண்ணிக்கை பல்லாயிரக்கணக்காக உயர்ந்துள்ளது. இதில் 95 வீதத்திற்கும் மேலானவர்கள் இலங்கைத் தமிழர்கள். இவர்களை இங்கு வாழும் பெரும்பான்மை சமுகத்தைச் சேர்ந்த பலரும் தமிழகத்தில் உள்ள தமிழர்களின் ஒரு பகுதியென நினைத்து விடுகின்றனர். பிரித்தானிய அரசாங்கம் சமுகக்கொள்கைகளை உருவாக்குகையிலும் சமுக நிதி ஒதுக்கீடுகளிலும் இலங்கைத் தமிழர்களை இந்தியர்கள் என்ற இனத்தொகுதிக்குள்ளேயே அடக்கி விடுகின்றனர். அதே போல பாடசாலைகளில் தமிழகத்து தமிழர்கள் குறித்த வரலாறு கலாச்சாரம் பாரம்பரியம் என்பன படிப்பிக்கப்படுகின்றனவே தவிர இலங்கைத் தமிழர்களின் தனித்துவம் இன்னும் தெளிவான முறையில் வெளிக்கொண்டு வரப்படவில்லை. இதனால் பிரித்தானியா வாழ் இலங்கைத் தமிழ் இளம் சமுதாயத்திற்கும் கூட தங்களின் அடையாளம் என்ன என்பதை தெளிவாக அறிந்து கொள்ளாத தெரிந்து கொள்ளாத நிலை உண்டு. இந்நிலையில் உண்மையில் இலங்கைத் தமிழர்கள் உலகின் தனியான தேசிய இனங்களில் ஒருவர் என்பதையும் 1972ம் ஆண்டுக்குப் பின்னர் அவர்கள் தங்களை

தமிழீழ மக்கள் என்ற தங்களின் வரலாற்றுத் தாயக அடையாளத்தின் மூலமாக உலகிற்கு வெளிப்படுத்தி வருகின்றனர் என்பதையும் தமிழீழ இளம் சந்ததிக்கும் பிரித்தானிய மக்களுக்கும் எடுத்து விளக்க வேண்டிய தேவை இருப்பதை அருண உதயம் தமிழ்ப்பாடசாலை தெளிவாக உணர்ந்தது. அத்துடன் 1972க்கு முன்னர் இலங்கைத் தமிழர்கள் எனவும் இன்று தமிழீழ மக்கள் அழைக்கப்படும் இம்மக்கள் குறித்து இன்று உலகில் பேசப்படாத செய்தி தாள்களே இல்லை எனலாம். இந்நேரத்தில் உலகில் உள்ள மற்றைய இனத்தவர்களும் தமிழீழ மக்களின் வரலாறு கலாச்சாரம் பராம்பரியம் குறித்து அறிந்து கொள்வதற்கான முறையில் பிரித்தானிய வாழ் தமிழ்ப் பெற்றோர்கள் தங்களின் தாயகம் தாய்மொழி குறித்த அறிவைப் பெருக்க வேண்டிய அவசியமும் உண்டு.

இவற்றை மையமாகக் கொண்டே எமது மாணவர்களுக்கு இலங்கைத் தமிழர்கள் வரலாறு கலாச்சாரம் பாரம்பரியம் என்னும் கற்கை நெறி ஒன்றை தென்கிழக்கு இலண்டன் சமுக நிறுவனத்தின் ஆதரவுடன் நடாத்தினோம். பின்னர் எல்லா வயதில் உள்ள மாணவர்களுக்கும் பெற்றோர்க்கும் ஆசிரியர்களுக்கும் இலங்கைத் தமிழர்களின் வரலாறு கலாச்சாரம் பாரம்பரியம் குறித்த தகவல்களைத் தரும் இந்த நூலையும் வெளியிட்டு உள்ளோம். இந்நூல் இலங்கைத் தமிழர்கள் வரலாறு கலாச்சாரம் பாரம்பரியம் குறித்த ஆர்வத்தைத் தூண்டும் என நம்புகின்றோம். இந்நூலைத் தயாரித்து வழங்கிய எங்கள் பாடசாலையின் தமிழ் ஆசிரியை திருமதி நீற்றா பற்றிமாகரனுக்கு எங்கள் இதய நன்றிகளைத் தெரிவிக்கின்றோம் இந்த கற்கைநெறியை நடாத்தும் பொழுது கூடவே உதவிய திருமதி சித்ரா யோகேஸ்வரன் திருமதி மரீனா வேதநாயகம் ஆகியோருக்கும் வகுப்புகளில் படிப்பிக்கும் பொழுது பிள்ளைகளுடன் வந்து பங்குபற்றிய பெற்றோர்களுக்கும் வகுப்புக்களை நடாத்த இளையோர் மண்டபத்தை தந்து உதவிய திரித்துவ மெதடிஸ்ட் திருச்சபையின் நிர்வாகத்தினருக்கும் எங்கள் இதய நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டு உள்ளோம்.

அருண உதயம் தமிழ்ப் பாடசாலை நிர்வாகக்குழு

# இயல் இசை நாடகம்
# தமிழர் பாரம்பரியம் முத்தமிழாய்ப் பரிமாணம்

தமிழர் பாரம்பரியம் தமிழையே இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழாக உலகிற்கு எடுத்துரைக்கின்றது. ஒரு குழந்தை பிறந்தது முதலே தாய் தந்தை உறவினர் நண்பர்கள் என்னும் தாயகத் தொகுதியில் இருந்து தனது மொழியை அறிய பேச எழுதத் தொடங்குகிறது. இவ்வாறு தாயின் வழியாகவும் தாய் மண்ணின் வழியாகவும் வளரும் மொழியறிவு தான் பிள்ளையின் தாய்மொழியாகிறது. எனவே இயல் இசை நாடகத்தினை தனது அன்றாட வாழ்வில் இருந்து தான் குழந்தை பழகிப் பயின்று தெளிந்து கொள்கிறது. பின்னர் பள்ளியில் ஆசிரியரிடம் முறையான வகையில் மொழியறிவை வளர்த்துக் கொள்கிறது. இதனால் இயற்றமிழ் தமிழ் மொழியின் எழுத்து பேச்சு என்னும் இரண்டு தன்மைகளையும் அறிந்து கொள்ளத் தெரிந்து கொள்ள ஆய்வுகளை வெளிப்படுத்த உதவும் விஞ்ஞான ரீதியான தன்மைகளுடையதாகவும் தொடர்புசாதனமாக செயற்படும் இயல்புள்ளதாகவும் அமைகிறது.

முதலில் குழந்தையைக் கவர்வது இசைத் தமிழே. ஏனெனில் தாயின் ஓசை குழந்தைக்கு உணர்வூட்டுகின்றது. பசிக்கும் பொழுதும் தூக்க மயக்கம் வரும் பொழுதும் நோயில் வாடும் பொழுதும் பாயில் விளையாடும் பொழுதும் தாயின் குரல் அமுத ஒலியாகத் தாலாட்டு ஓசையாக ஆதரவு ஓசையாக மகிழ்வூட்டு ஓசையாக குழந்தைக்கு வளர்ச்சி ஊட்டி வாழ்க்கை அளிக்கிறது. இதனால் தாலாட்டு முதல் இசை.

அடுத்து இயற்கையின் ஓசைகள் காற்றின் நாதம் விண்ணின் அதிர்வுகள் அலையின் அசைவுகள் நதியின் ஆற்றின் நீர்வீழ்ச்சியின் சப்தங்கள் எனப் பலவகை இயற்கை தரும் ஓசைகளும் பறவைகளின் ஒலிகளும் இசையின் முதற்படியாக குழந்தைக்கு இசை உணர்வளிக்கின்றன. தோலிசைக் கருவிகள் நம் தமிழின் தொன்மையை தான்மையை உணர்த்துகிற பெருமை மிகு இசைக்கருவிகள். தமிழர்க்கு மட்டுமல்ல இந்திய இசையுலகிற்கே தனிமதிப்பைப் பெற்றுக் கொடுப்பனவாக பறைகள் விளங்குகின்றன. ஸ்வாதி முனிவர் தமது புஸ்கரம் என அழைக்கப்படும் ஆச்சிரமத்துக் குளத்தில் நீராடச் சென்றிருந்த வேளையில் இந்திரன் பெருமழையைப் பெய்வித்தானெனவும் அந்த

மழைத்துளிகள் குளத்து தாமரை இலைகளில் விழுந்த பொழுது பிறந்த தாளத்துடன் கூடிய இனிய ஒலிகளில் முனிவர் தம்மை மறந்தாரெனவும் ஆச்சிரமத்திற்குத் திரும்பியதும் விசுவகர்மனை அழைத்து அவரின் உதவியுடன் பணவம் தாதுரம் என்னும் பறைகளை நிர்மாணம் செய்து பறையினைத் தோற்றுவித்ததாக பரதமுனிவர் தமது நாட்டிய சாத்திரத்திலே கூறிச் சென்றுள்ளார். இதனால் பறைகளுக்கு புஸ்கரம் என்ற பெயர் தோன்றியது என்பாரும் உள்ர்.

இனி நாளாந்த வாழ்வில் உணரப்பட்ட ஒலிகள் இசைக்கருவிகளின் தொடக்கமாயின என்பர். ஆரம்பத்தில் உணவு சேகரித்து வைக்கும் பானைகள் உணவின் பாதுகாப்புக்காக தோலினால் மூடப்பட்டது எனவும் இந்நேரத்தில் இதிலிருந்து எழுந்த ஒலியே பறையின் முதற்தோற்றமாக அமைந்தது என்று கருதுபவர்களும் உண்டு. இவர்கள் தங்களின் கருத்திற்கு அரண் சேர்க்கும் நோக்கில் இன்றும் தானியங்களை அளக்கின்ற பாத்திரம் பறை என அழைக்கப்படுவதைச் சுட்டிக்காட்டுகிறார்கள். தோல் கருவிகள் இந்திய இசையுலகில் அவநந்த வாத்தியங்கள் என அழைக்கப்படுகின்றன. அவநந்தம் என்ற வட சொல்லுக்கு மூடப்படுவது என்று பொருள்.

தமிழர்கள் மலையும் மலைசார் நிலமுமாகிய குறிஞ்சி நிலத்தில் கற்கால நாகரீகத்தைத் தோற்றுவித்தனர். இந்த குறிஞ்சி நிலத்தின் இசைக்கருவியாகவே பறை பிறப்புற்றது. பறைகள் அச்சத்தை விலக்கும் ஒலி எழுப்பும் நோக்கிலேயே மக்களிடை பயன்பாட்டுக்கு வந்ததாகக் கூறப்படுகிறது. வேட்டையில் கிடைத்த மிருகங்களின் தோல்கள் ஆரம்பத்தில் பறையை அமைப்பதற்கு உதவின. ஆயினும் மனித அறிவின் வளர்ச்சியில் பறையின் பல வடிவங்கள் தோற்றம் பெற்றன. மகிழ்ச்சியளிக்கும் சம்பவங்கள் ஆனந்த பேரி மிருதங்கம் தவில் முதலியவற்றின் முழக்கத்துடன் கொண்டாடப்பட்டது. உருளை வடிவமான இருபறைகளைக் கட்டி வாசிக்கப்படும் கருவி பம்பை எனப்பட்டது. பம்பையும் கழுத்திலிருந்து கட்டித் தொங்கவிட்டு வாசிக்கப்படும் தப்பட்டையும் உடலில் பொருத்தி கைகளைக் கொண்டோ அல்லது கோலினாலோ வாசிக்கும் உடுக்கை போன்ற பறைகளும் நாட்டார் பாடல்களிலும் நாட்டார் வழக்கியல்களுக்கு ஊடாக வளர்ச்சியுற்ற ஆன்மீக விழாக்களிலும் வாசிக்கப்படுகின்றன.

ரணபேரி முழவு முரசம் போன்ற பறைகள் போரின் தொடக்கத்தை மக்கள் அறிந்து கொள்ளவும் களத்துச் செய்திகளை மக்களுக்கு

எடுத்துரைக்கும் தன்மையானவை. முரசம் என்னும் பறை வெற்றியினைக் குறிக்கும் ஒலியாகி இறுதியில் நாட்டின் இறைமையினைக் குறிக்கும் அடையாளமாகப் போற்றப்பட்டது. ஒரு நாட்டின் முரசம் முரசுக் கட்டிலில் வைக்கப்பட்டு இருக்கும். அதனை யாராவது அவமதித்தாலோ அல்லது கவர்ந்து சென்றாலோ அவர்கள் நாட்டின் இறைமையை அவமதித்து விட்டதாகக் கருதி அவமதித்தவர்கள் மேல் போர் தொடுக்கப்படுவது பழந் தமிழர் பண்பாடாக இருந்தது. இதனால் போர் முரசம் என முரசத்தின் ஒலி போருக்கான அழைப்பாகக் கொள்ளப்பட்டது. அவ்வாறே வெற்றியின் பின்னரான முரசத்தின் ஒலி வெற்றி முரசம் என முரசத்தினைச் சிறப்பாக அழைக்க வைத்தது. முரசத்தை நீராட்டுதல் என்பது தமிழர்களின் படைத்துறைப் பழக்கங்களில் ஒன்றாக இருந்தது.

சேர மன்னன் சேரமானைச் சந்திக்க வந்த புலவர் மோசிக்கீரனார் களைப்பு மிகுதியில் முரசுக்கட்டிலில் தூங்கியதையும் நீராட்டி முரசத்துடன் வந்த தானைத் தலைவன் முரசுக் கட்டிலில் ஒருவர் படுத்திருத்தல் கண்டு அவர் தலையைச்சீவ மன்னவன் ஆணை நாடிச் சென்றதையும் அங்கு வந்த மன்னவனோ படுத்திருப்பது தமிழின் உருவாம் மோசிக்கீரனார் என்று கண்டு தான் அவர் துயிலச் சாமரம் வீசினதையும் தமிழர்களின் இலக்கிய வரலாற்றில் பார்க்கின்றோம்.

சாவீட்டில் அடிக்கப்படும் பறை பறைமேளம் என இன்றும் அழைக்கப்படுகிறது. இசையோடு பிறந்த தமிழன் இசையோடு செல்லுதல் தமிழரின் பண்பாட்டில் இசை அவர்களின் நாளாந்த வடிவுகளில் ஒன்றாக அமைந்திருப்பதை எடுத்துக்காட்டுகிறது. அவ்வாறே ஆலயங்களில் தவில் நாதஸ்வரத்துடன் அடிக்கப்பட்டு பூசைகள் திருவிழாக்கள் திருமணங்கள் நடைபெறுவது தமிழர் தாயகப் பகுதிகளின் பண்பாடுகளில் ஒன்றாக அமைகிறது. பலவிதமான தாள வாத்தியங்கள் இருந்தாலும் இன்று இசை மற்றும் கலைநிகழ்ச்சிகளில் மிருதங்கமே முக்கிய தாளவாத்தியமாகத் தொடர்கிறது. தபேலா என்னும் தாள வாத்தியமும் இன்று இசை கலை மேடைகளில் இடம்பெறும் மற்றொரு முக்கியமான தாள வாத்தியமாகும். பறையுடன் சேர்ந்து வேலன் வெறியாட்டு கொற்றவைக் கூத்து போன்ற துள்ளிக் குதித்து ஆடும் நடனவடிவங்களும் குறிஞ்சி நிலத்தின் நடனக்கலையாகப் பரிணமித்தன.

காடும் காடுசார்ந்த நிலமுமாகிய முல்லையில் வழக்குக்கு வந்த இசைக்கருவி துளைக்கருவி எனப்படும் புல்லாங்குழல் ஆகும்.


விண்ணவன் என்ற சொல்லே விஸ்ணு ஆகியதென்றும் கிருஸ்ணா என்ற சொல்லும் முல்லைக்காட்டின் கருமைநிறத்தினைக் குறிக்கும் சொல்லில் இருந்தே பிறந்தது என்றும் கூறி கிருஸ்ண வழிபாடு தமிழகத்தில் தோன்றி வடநாட்டுக்குச் சென்றது என்பது முத்தமிழ் வித்தகர் விபுலாநந்தர் முதல் இன்றையத் தமிழறிஞர் நாட்டுப்பற்றாளர் அமரர் க. சொக்கலிங்கம் ஆசிரியர் வரை ஆய்வாளர்கள் கூறும் கருத்தாக உள்ளது. எனவே முல்லையில் பிறந்த இசைக்கருவியாக கண்ணன் ஊதும் புல்லாங்குழல் அமைகிறது. புல்லாங்குழல் இசைக்க கூடிநின்று ஆடும் நடனவகைகளும் முல்லையில் வளர்ந்தன.

வயலும் வயல் சார்ந்த நிலமுமாகிய மருதத்தில் சில மாதங்களே பயிர் விளைத்து பலமாதங்கள் ஓய்ந்து இருக்கும் தன்மை மருதநில மக்களுக்கு இருந்ததினாலும் விளைந்த விளைபொருட்களைச் சேமித்து வைத்துப் பண்டமாற்று மூலம் பொருட்களை மற்றவர்களுக்கு அளித்து அவர்களின் ஆற்றல்கள் வளர உதவும் பொருள்வளம் மருதநில மக்களிடம் காணப்பட்டதினாலும் மருதநிலம் கலைப்பூமியாக கலைகளின் பிறப்பிடமாக மாறியது. இங்கு மருத யாழ் வீணை போன்ற நரம்பு இசைக்கருவிகளும் தப்பாட்டம் போன்ற இன்றைய பரதநாட்டியத்தின் மூலவடிவங்களும் வளர்ச்சியடைந்தன.


கடலும் கடல் சார் நிலமுமான நெய்தல் நிலத்தில் கடலில் பயணித்த அன்பரை எண்ணி வாடும் உள்ளத்தினளாய் பெண் தவிக்கும் இரங்கல் இசையின் நடனக் கலையின் பொருளாகியது. இயற்கை வளம் இழந்த பாலையில் மக்கள் போரடி வாழ வேண்டிய தேவையிருந்ததால் அங்கு வீரத்தை வெளிப்படுத்தும் இசைகள் நடனங்கள் பிறந்தன. காலப்போக்கில் ஆடலும் பாடலும் கதையும் கலப்புற்ற கலைவடிவமாக நாடகங்கள் பிறந்தன. கதைப்பாடல்கள் கூத்துக்கள் என்று வளர்ச்சி பெற்ற தமிழர் நாடகக்கலை மேலைத்ததேயத்தவர்களின் வருகையாலும் தொழில்நுட்ப வளர்ச்சிகளினாலும் திரைப்பட வளர்ச்சி நிலைக்குச் சென்று வானொலி தொலைக்காட்சி நாடகங்களையும் கொண்டதாக இன்று பெருவளர்ச்சி பெற்று நிற்கிறது. இவ்வாறாகத் தமிழ் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழாக இன்று தமிழர்கள் வாழ்வில் இரண்டறக் கலந்து நிற்கிறது. இன்று தமிழர்கள் தமிழின் மூன்று தளத்தையும் கணனிவலைகளினுடாக வளர்க்கும் வளர்ச்சி நிலை தமிழர்கள் எல்லைகளைக் கடந்த நிலையில் முத்தமிழைத் தங்கள் பிள்ளைகளுக்கு வழங்கிடும் வழிகளைத் தோற்றுவித்து வளர்த்து வருகிறது.


# பாரதி மொழியில் இசை பிறந்த வரலாறு





ஓவியம் - அலன் பிரப
பற்றிமாகரன்





இசை பிறந்த வ்ரலாற்றைப் பாடிய பாரதி

> கானப்பறவை கலகலவென்னும் ஓசையிலும்
> காற்று மரங்களிடைக் காட்டும் இசைகளிலும்
> ஆற்று நீரோசை அருவி ஒலியினிலும்
> நீலப் பெருங்கடல் எந்நேரமுமே தான் இசைக்கும்
> ஓலத்திடையே உதிக்கும் இசையினிலும்
> மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
> ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந் தேன் வாரியிலும்
> ஏற்ற நீர்ப்பாட்டின் இசையினிலும் நெல்லிடிக்குங்
> கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
> சுண்ணமிடிப்பார் தஞ்சுவை மிகுந்த பண்களிலும்
> பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
> வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
> கொட்டியிசைத்திடும் கூட்டமுதப் பாட்டினிலும்
> வேயின் குழலோடு வீணை முதலா மனிதர்
> வாயினிலுங் கையாலும் வாசிக்கும் பல்கருவி

நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்

எனப் பாடுவதைக் காணலாம்.

இப்பாடலின் மூலம் இயற்கையில் மூங்கில் காடுகளிடை காற்றுப் புகும் பொழுது பிறக்கும் ஓசையே முதல் இசையாக மனிதனால் உணரப்பட்டது என்பதைப் பாரதி எடுத்துக் காட்டுகிறார். இந்த அனுபவமே துளைக் கருவிகளினுடாக இசையைப் பிறப்பிக்கும் தன்மையைத் தோற்றுவித்தது. புல்லாங்குழல் போன்ற இசைக் கருவிகள் பிறந்தன. அவ்வாறே மனிதன் கைகளைத் தட்டும் பொழுது எழுந்த ஓசை தோல் இசைக் கருவிகளின் வளர்ச்சிக்கு வித்திட்டதாகக் கூறப்படுகிறது. பறைகள் தோற்றம் பெற்றன. மேலும் வேட்டை நாகரீகத்தில் நரம்புகள் மேல் ஆயுதங்கள் உரசும் பொழுது எழுந்த ஓசைகள் நரம்பு இசைக் கருவிகளின் பிறப்புக்கு உதவியது என்பர்.

வீணை வயலின் சித்தார் எனப் பல்வகையான இசைக் கருவிகள் தோன்றி உலகில் இசைச்செல்வத்தின் வளர்ச்சிக்கு உதவின. பின்னர் தொழில்நுட்பங்களும் தேசத் தேசிய வேறுபாடுகளும் பன்மொழி பல் கலாச்சாரத்தின் வளர்ச்சியும் இன்றைய இசையுலகின் தோற்றத்தை உருவாக்கின. மின்னியல் இலத்திரனியல் கணனிஇயல் ஆகியவற்றின் தோற்றங்களும் வளர்ச்சிகளும் இன்று இசையை மிகவும் நுட்பமான முறையில் அதன் நுட்பங்களை மனிதன் இரசிக்க கூடிய அளவுக்குப் பெருவளர்ச்சியடைச் செய்துள்ளது.

பன்னிரு வயதிற்கு உட்பட்டோருக்கு

## தமிழர்கள்

தமிழ் மொழியினைப் பேசி தமிழர்களுடைய வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடித்து வாழ்பவர்கள் தமிழர்கள் எனப்படுகின்றனர். இன்றைய உலகில் தமிழர்கள் இந்தியாவின் தமிழ்நாடு மாநிலம் இலங்கையின் தமிழீழத் தாயகம் என்னும் இரண்டு நிலப்பரப்புக்களையும் தமது தாயகமாகக் கொண்டு வாழ்கின்றனர்.

வாழ்வின் தேவைகளுக்காக இலங்கை இந்தியாவின் மற்றைய பகுதிகளிலும் தமிழர்கள் அதிக அளவில் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். ஒரு நாட்டின் உள்ளே தாங்கள் காலாதி காலமாக வாழ்ந்து வரும் பகுதிகளில் இருந்து வெளியேறி மற்றைய பகுதிகளில் நிலையாக வாழ்பவர்களை இடம்பெயர்ந்து வாழ்பவர்கள் என அழைப்பர்.

அவ்வாறே பல்வேறு காரணங்களுக்காக மற்றைய நாடுகளுக்குச் சென்று அங்கே குடியேறி அந்த அந்த நாட்டின் குடிமக்களாக வாழ்பவர்களை அல்லது அந்த அந்த நாடுகளில் நீண்ட காலமாக வாழ்பவர்களை புலம்பெயர்ந்த மக்கள் என அழைப்பர்.

தமிழர்கள் இன்று உலகில் 70 க்கு மேற்பட்ட நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இந்த புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் ஆரம்பத்தில் தொழிலுக்காகவும் படிப்புக்காகவும் புலம்பெயர்ந்தனர். இவ்வாறு இந்தியாவின் தமிழகத்தில் இருந்து புலம்பெயர்ந்த தமிழர்களைச் சிங்கப்பூர் மலேசியா தென்னாபிரிக்கா மொரீசியஸ் சீசல்ஸ் ரீயூனியன் போன்ற நாடுகள் அதிக அளவில் கொண்டுள்ளன. மலேசியா சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இலங்கையில் இருந்து பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்காலத்தில் வேலைக்காகப் புலம்பெயர்ந்த தமிழர்களும் குறிப்பிடத்தக்க அளவுக்கு உள்ளனர். இந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் அந்த அந்த நாட்டின் குடிமக்களாக அதே வேளையில் தமிழர் என்னும் தங்கள் அடையாளத்தை மொழி கலாச்சார ஆன்மீக வாழ்வினூடாகத் தொடர்ந்து பேணி வருகின்றனர்.

1983ல் இலங்கையில் அரச ஆதரவுடன் நடாத்தப்பெற்ற ஜூலை தமிழ் இனஅழிப்புக்குப் பின்னர் இலங்கையில் இருந்து இலங்கைத் தமிழர்கள் அரசபயங்கரவாதத்தினால் புலம்பெயர்ந்து உலகின் பலநாடுகளிலும் அரசியல் தஞ்சம் கோரி வாழ்கின்றனர். இந்தியாவின்

தமிழகத்திலும் மேற்கு ஐரோப்பா கனடா அமெரிக்கா அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் அரசியல் தஞ்சம் கோரி வாழும் இலங்கைத் தமிழர்கள் பல்லாயிரக் கணக்கில் உள்ளனர். இந்தியாவில் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழாகள் முகாங்களிலும் வெளியிலும் வாழ்கின்றனர்.

ஐரோப்பாவிலும் கனடாவிலும் அரசியல் தஞ்சம் கோரியவர்கள் - கிடைத்தவர்கள் - நீண்டகாலமாக வாழ்ந்ததினால் அந்த நாடுகளில் வாழும் உரிமை அல்லது குடியுரிமை பெற்றவர்கள் என மூன்று வகையான நிலையில் இலங்கைத் தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்கள் 1972ம் ஆண்டுக்குப்பின் தங்களைத் தமிழீழ மக்கள் என்னும் தேசிய அடையாளத்துள் அடக்கப் பெரும்பாலும் விருப்புடையவர்களாக உள்ளனர்.

## பன்னிரு வயதுக்கு மேற்பட்டவருக்கு

## தமிழ்மொழி உலகின் தொன்மையான மொழி

தமிழ் மொழி உலகின் பழமையான மொழிகளில் ஒன்று. இன்றைய உலகில் மூவாயிரம் மொழிகள் உள்ளன எனவும் இவற்றுள் எழுநூறு மொழிகளுக்கே எழுத்துருவம் உள்ளதென்றும் கூறுகின்றனர். இலத்தீன் சமஸ்கிருதம் போன்ற உலகின் பழமையான மொழிகள் இன்று மக்களின் நாளாந்த வாழ்வில் பயன்படுத்தப்படுவதில்லை. தமிழ் மட்டுமே இன்றும் தொடர்ந்தும் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகிறது.

உலகிலுள்ள மொழிகள் 13 மொழிக் கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த மொழிக் கூட்டங்களுள் திராவிட மொழிக் கூட்டம் என்பதும் ஒன்று. இந்த திராவிட மொழிக் கூட்டத்தில் தமிழ் தெலுங்கு கன்னடம் மலையாளம் உட்பட மொத்தம் 28 மொழிகள் உள்ளன. இந்த 28 மொழிகளினதும் தலைமை மொழியாகத் தமிழ் காணப்படுகிறது. எலு என்னும் தமிழின் பழைய வடிவமே இந்த மொழிகளினது மூலமொழியாக இருந்தது என்பது ஆய்வாளர்களின் முடிபாக உள்ளது. இந்த எலு என்னும் மொழியே இலங்கைத் தீவிலும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் பேசப்பட்டது என்று கூறப்படுகிறது. பின்னர் புத்த மதத்தின் வருகையினால் இலங்கைத் தீவில் அறிமுகமான பாளி மொழியுடன் எலு மொழி கலப்புற்றதினால் உருவாகிய மொழிதான் சிங்களம் என்கின்றனர்.

பண்டைக் காலத் தமிழ் எழுத்தை தமிழி என்று அழைத்தனர். இந்த எழுத்துக்கள் கிறிஸ்துவுக்கு முன் முதலாம் நூற்றாண்டிலேயே இருந்துள்ளன என்பதை சமண நூலான சமவாயாங்க தெரிவிக்கிறது. ஆகவே தமிழ் எழுத்துக்கள் மிகப் பழமை வாய்ந்தன. தமிழ் எழுத்துருவம் பெற்றதன் பின்னரே மற்றைய பல மொழிகள் எழுத்துருவம் பெற்றன. ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னரே தமிழ் மொழி எழுத்துருவைப் பெற்றுவிட்டது என்பது ஏ சி பர்னல் போன்ற ஆய்வாளர்களின் கருத்து.

இனி மற்றைய மொழிகள் எக்காலத்தில் எழுத்துருவம் பெற்றனவெனப் பார்ப்போம்.

***கன்னட மொழி எழுத்துருவம் பெற்றது 5ம் நூற்றாண்டு***

***தெலுங்கு மொழி எழுத்துருவம் பெற்றது 7ம் நூற்றாண்டு***

***மலையாள மொழி எழுத்துருவம் பெற்றது 7ம் நூற்றாண்டு***

***ஆங்கில மொழி எழுத்துருவம் பெற்றது 7ம் நூற்றாண்டு***

***சிங்கள மொழி எழுத்துருவம் பெற்றது 7ம் நூற்றாண்டு***

***ஜெர்மனி மொழி எழுத்துருவம் பெற்றது 8ம் நூற்றாண்டு***

***பிரஞ்சு மொழி எழுத்துருவம் பெற்றது 9ம் நூற்றாண்டு***

***ஸ்பானிஸ் மொழி எழுத்துருவம் பெற்றது 9ம் நூற்றாண்டு***

***இரஸ்யன் மொழி எழுத்துருவம் பெற்றது 10ம் நூற்றாண்டு***

***இத்தாலி மொழி எழுத்துருவம் பெற்றது 10ம் நூற்றாண்டு***

போர்த்துக்கேய மொழி எழுத்துருவம் பெற்றது 12ம் நூற்றாண்டு தமிழர்களுக்கும் உலகின் மற்றைய நாட்டவர்களுக்கும் இடையில் இருந்த வணிகத் தொடர்புகள் காரணமாகப் பல தமிழ்ச் சொற்கள் உலகின் மற்றைய மொழிகளில் இடம்பெற்றன. உதாரணமாக இயேசுநாதர் பேசிய ஈப்ரு மொழியில் துகில் என்னும் தமிழ்ச் சொல் இடம்பெற்றிருந்தமையைக் கூறலாம். இவ்வாறாகத் தமிழ் உலகின் தொன்மையான மொழி என்பதற்குப் பல உதாரணங்களைக் காட்டலாம்.

## 16 வயதிற்கு மேற்பட்டவருக்கு

## பண்டையத் தமிழ் கூறு நல்லுலகம்

நமக்குக் கிடைக்க கூடிய மிகப் பழந் தமிழ் நூலாகிய தொல்காப்பியம் தமிழ் பேசப்பட்ட இடங்களின் எல்லைகளைக் கூறுகிறது.

**வடவேங்கடந் தென்குமரி யாயிடைத்**

**தமிழ் கூறு நல்லுலகத்து**

என்பது அந்தச் சூத்திரம். வடக்கே வேங்கட மலையையும் தெற்கே குமரிக் கடலையும் கொண்ட நிலப்பரப்பில் தமிழ் பேசப்பட்டதினால் இந்த நிலப்பரப்பு தமிழ் கூறு நல்லுலகு என்று தொல்காப்பியத்தில் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

*இளங்கோ அடிகள் செய்த சிலப்பதிகாரத்தில்*

**நெடியோன் குன்றமும் தொடியோன் பௌவமுந்**
**தமிழ் வரம்பறுத்த தண்புனல்நாடு**

என்கிற பாடல் நெடியோன் குன்றம் என இன்றைய திருப்பதி மலையையும் தொடியோன் பௌவம் என இன்றைய கன்னியாகுமரிக்குத் தெற்கேயுள்ள கடலையும் தமிழ் கூறு நல்லுலகின் எல்லைகளாகக் கூறுகிறது.

கடல் கோள்களால் பரந்து விரிந்திருந்த தமிழர்களின் தாயகப் பகுதிகள் அழிக்கப்பட்ட வரலாற்றைத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பாகச் சிலப்பதிகாரம் மணிமேகலை போன்ற காவியங்கள் செங்கோன் தரைச்செலவு என்ற நூல் ஆகியன தெரிவிக்கின்றன.
தற்பொழுது உள்ள கன்னியாகுமரி முனைக்குத் தெற்கே பரந்து விரிந்திருந்த லெமூரியாக் கண்டம் இருந்தது. இந்தக் கண்டத்தில் இருந்த தென்மதுரை என்னும் நகரத்தில்தான் முதலாவது தமிழ்ச்சங்கம் இருந்தது என்பது தமிழர் மரபாக உள்ளது. இந்நகர் கடற்கோளால் அழிவுற அதற்கு வடக்கே இருந்த கபாடபுரத்தில் இரண்டாவது தமிழ்ச்சங்கம் அமைக்கப்பட்டது என்பது மரபாக உள்ளது. இதுவும் கடற்கோளால் அழிவுற்ற பின்னரே தற்போதுள்ள மதுரையில் மூன்றாம் தமிழ்ச்சங்கம் திகழ்ந்தது என்பது ஆய்வாளர்களின் முடிபாக உள்ளது. இலங்கைத் தீவின் வரலாற்றிலும் மூன்று கடற்கோள்கள் கி. மு. 2387 கி. மு. 504 கி. மு. 306 ல்

இடம்பெற்றன என்று க. வெள்ளைவாரணன் தனது தொல்காப்பியம் என்னும் நூலில் கூறுகின்றார். விட்டி பொத் என்ற சிங்கள நூல் இராவணன் இறந்த பின் கி. மு. 2367ல் ஏற்பட்ட கடற்கோளினால் அவன் தலைநகரான இலங்காபுரி கடலுள் தாண்டுவிட்டதாகக் கூறுகிறது. இக் கடற்கோள் கி.மு. 1810ல் ஏற்பட்டிருக்கலாமென சேர் வில்லியம் ஜோன்ஸ் கருதுவதாக திருமதி தனபாக்கியம் குணபாலசிங்கம் தனது இலங்கையில் தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாச்சாரமும் என்னும் நூலில் கூறுகிறார்.

இத்தகவல்களை எல்லாம் வைத்துப் பார்க்கையில் முன்னர் லெமூரியாக் கண்டத்தில் பரந்து விரிந்த பிரதேசமாக இருந்த தமிழ்கூறு நல்லுலகு இயற்கை அனர்த்தங்கள் அரசியல் ஆதிக்கங்கள் பண்பாட்டுப் போர்கள் என்பவற்றால் பின்னர் குறுகியது என்பது தெளிவாகத் தெரிகிறது.

**ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருக்கு:**

## தமிழன் தோன்றிய லெமூரியாக் கண்டம்

தமிழர்கள் என்றால் யார் என்ற எந்தச் சிந்தனையிலும் தமிழன் தோன்றிய லெமூரியாக் கண்டம் குறித்த பார்வை அவசியமாகிறது. தாயகத்தில் இருந்து ஆசிரியர் ம. கங்காதரம் அவர்கள் எழுதிய வித்தும் விழுதும் தமிழினம் அன்று முதல் இன்று வரை என்னும் நூலில் காணப்படும் லெமூரியாக் கண்டத்தினைக் குறித்த தகவல்களில் சிலவற்றைப் பார்ப்பது இழக்கப்பட்ட லெமூரியா குறித்த தெளிவைத் தரும்.

சூரியனில் ஏற்பட்ட குமுறல் நமது பூமித்தாயின் பிறப்பாகியது. குமுறலால் சிதறிய கோளவடிவான சூரியத் துண்டம் சூரியனை வலம்வரத் தொடங்கியது. இக்கோளம் படிப்படியாகக் குளிர்ச்சியுற்ற பொழுது இன்றையப் பூமியின் தோற்றம் உருவாகியது. பூமியின் வடபாகம் யூரேசியா என்றும் தென்பாகம் கோந்துவளநாடென்றும் நிலவியலில் பெயர் பெற்றன. அந்நேரம் அமெரிக்க ஐரோப்பிய ஆபிரிக்க கண்டங்கள் ஒன்றோடொன்று இணைந்து இருந்தன. இன்றைய இமயமலை இருக்கவில்லை. அவ்விடத்தில் கிழக்கு மேற்காக இருந்த நீர்ப்பரப்பு தெத்திசுக் கடல் என்றழைக்கப்பட்டது. அத்திலாந்திக் பெருங்கடல் அந்நேரம் இருக்கவில்லை. இன்றைய இந்துப் பெருங்கடல் உள்ள நீர்ப்பரப்பு நிலப்பரப்பாக ஆபிரிக்காவின் கிழக்குக்

கரையிலிருந்து கிழக்கே சந்தா தீவுகள் வரை பரந்திருந்தது. கோந்துவளநாட்டில் ஏற்பட்ட நிலநடுக்கங்கள் தொடர்ந்தன. பலகோடி ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த அதிர்வின் பின்னர் கடற்கோள்களால் யூரேசியா தெற்கு நோக்கி சற்று நிலைபெயர கோந்து வளநாட்டில் இருந்து பிரிந்த துண்டம் பேராற்றலோடு வடக்கு நோக்கி நகர்ந்தது. இதனால் தெத்தீசுக்கடல் இருந்த பகுதியில் இன்றைய இமயமலை பனிமலையாக எழுந்தது. கோந்து வளநாட்டின் தென் கீழ்பகுதியில் இருந்து பிரிந்த மற்றொரு சிறுதுண்டம் கிழக்கு நோக்கி நீண்ட தூரத்திற்கு அசைந்து இன்றைய அவுஸ்திரேலியக் கண்டமாகியது. எஞ்சியிருந்த பெருநிலப்பரப்பு தான் உயிரினங்களின் தோற்றத்தின் தளமாகியது. அங்கு வாழ்ந்த லெமூர் என்னும் குரங்கினத்தின் பெயரினையே ஸ்கிளேற்றர் என்னும் ஆய்வாளர் அந்தப் பெருநிலப்பரப்பின் பெயராகவே மாற்றிக்கொண்டார். பெருவெள்ளத்துக்குப் பின்னர் இந்த லெமூரியாவில் தான் மனித இனத்தின் தோற்றம் வளர்ச்சி ஆரம்பமாகியது என்பது ஆய்வாளர் பேராசிரியர் ராலே போன்றோரின் முடிபு. இதனை உறுதி செய்யக் கூடிய வகையில் 100000000 ஆண்டுகளுக்கு முன்னர் இந்துமாக்கடலில் இலங்கைத் தீவின் தென்கிழக்கே 550 கல் தொலைவில் 10000 அடி உயரமுள்ள ஒரு மலையிருந்தது என்று இந்துமாக்கடலில் ஆய்வு செய்த 70 ரஸ்ய ஆய்வாளர்களின் முடிபு வெளியாகியது. திருகோணமலை மூதூர் கடற்பாதையில் பாதாளமலை என்னும் மலையிருப்பதாக தமிழர்கள் மரபுரீதியாக நம்புவதும் அதனை உறுதிசெய்யக் கூடிய வகையில் கடலில் பெரும் நீரோட்டங்கள் பெரும் சுழியோட்டங்கள் இப்பகுதியில் ஏற்படுவதும் ரஸ்ய ஆய்வாளர்களின் கருத்துக்கு அரண் சேர்க்கின்றன.

இவ்வாறாக இலங்கை தென்னிந்தியா மாலைதீவு முதல் கிழக்கே இந்தியாவுக்கு அப்பால் சந்தா தீவுகள் வரையும் மேற்கே மடகாஸ்கார் மற்றும் ஆபிரிக்காவின் தென்கிழக்கு கரைவரையும் பரந்திருந்த கண்டமே லெமூரியாக்கண்டம். இந்தக் கண்டத்தில் உருவான தமிழரின் முன்னோர்கள் இயற்கையின் மாறுபாட்டுக்கேற்ப அங்கிருந்து இடம்பெயர்ந்து பின்னர் திரும்பவும் தென்னிந்தியாவுக்கு வந்ததனர். இதனால் தான் திராவிடர்கள் மத்திய ஆசியாவினர் -மங்கோலிய இனத்தவர் - செமிட்டிக் இனத்தவர் அந்நாடுகளில் இருந்து வந்தவர்கள் என்ற பல விவாதங்கள் முன்வைக்கப்பட்டன. லெமூரியாக் கொள்கை தமிழர் குறித்த உண்மைகளைத் தெளிவாக்கிறது.

**பெற்றோர்கள் ஆசிரியர்களுக்கு**

## தமிழரின் பொதுவான வரலாறு

தமிழர்கள் சேர சோழ பாண்டிய அரசுக்களை அமைத்தவர்கள் என்பது வரலாறு. இதனால் தமிழ் கூறு நல்லுலகம் மூவேந்தர் நாடு எனச் சிறப்பாக அழைக்கப்பட்டது. இவர்களில் சேர அரசே பழமையானது. வில் சேர அரசர்களின் தேசியக் கொடிச் சின்னம். சேர அரசர்களில் இருவகையினர் வரலாற்றில் காணப்படுகின்றனர். சேரநாட்டில் உள்ள வஞ்சி நாட்டைத் தலைநகரமாகக் கொண்டு உள்நாடுகளை ஆட்சி செய்த சேரர்கள் இரும்பொறை என்னும் சேரமன்னனின் வழிவந்தவர்கள். தொண்டியைத் தலைநகராக் கொண்டு கடற்கரைப் பகுதிகளை ஆட்சி செய்த சேரர்கள் உதியன் சேரலாதன் என்னும் சேரமன்னனின் வழிவந்தவர்கள். சேரர்களின் புகழ் பூத்த மன்னர்களாக கண்ணகிக்குச் சிலையெடுத்த சேரன் செங்குட்டுவன் - திருமாவளவன் என்று வீரத்திற்காகப் பாரே போற்றிய கரிகாலன் - நீண்ட நாள் வாழும் சக்தியளிக்கும் நெல்லிக்கனியைத் தான் உண்ணாது தமிழ் வாழவென ஔவையாருக்கு அளித்த அதியமான் நெடுமான் அஞ்சி போன்ற பல அரசர்களை இன்றும் தமிழ்கூறு நல்லுலகு போற்றிப் புகழ்கிறது. சேரத்து இளவரசன் இளங்கோ இசைத்த சிலப்பதிகாரம் என்னும் இன் தமிழ்க்காவியம்தான் உலகின் முதற்குடிமக்கள் காவியம் என்னும் சிறப்புடன் பார் புகழும் பேரிலக்கியமாகத் திகழ்கிறது. இன்று சேரநாடு கேரளம் என்னும் பெயரில் பெரும்பகுதி மலையாள மொழி பயிலும் பிரதேசமாகத் திகழ்கிறது. திருவனந்தபுரம் கேரளத்தின் தலைநகராக உள்ளது.

அடுத்து பாண்டி நாடு செந்தமிழ்ப் பூமியென உலகு போற்றும் பெருநாடு. தமிழ்ச்சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த பெருமைக்குரியவர்கள் பாண்டிய மன்னர்கள். இன்றைய மதுரை அன்றைய பாண்டி நாட்டின் இறுதிக்காலத் தலைநகர். துள்ளும் கயல் மீனைக் கொடியில் எழுதி வேப்பம் பூ மாலை சூடி பாண்டியர்கள் நடத்திய போர்கள் தமிழர் வரலாற்றினுக்கு புகழ் படைத்தன. சந்திர வம்சத்தவர் என்று கூறப்பட்ட இவர்களுக்கும் விஜயன் காலம் முதல் இலங்கையில் சிங்கள அரசர்களுக்கும் இடையில் நிலவிய உறவுகள் பல. விஜயனின் தோழர்கள் பாண்டிய இளவரசிகளையே தருவித்து திருமணம் செய்ததாக இலங்கையின் மகாவம்சம் கூறுகிறது. பலமுறை பாண்டியர்கள் இலங்கையின் சிங்கள அரசுக்கள் மீது படையெடுப்பும்

நடாத்தியுள்ளனர். பாண்டியன் என்ற சொல் பண்டையர் பழங்காலத்தவர் என்ற பொருளில் உருவானது என்பர். குலசேகரப் பாண்டியனின் மறைவுக்குப் பின் அவனுடைய மூத்த மகன் சுந்தர பாண்டியனுக்கும் இளைய மகன் வீரபாண்டியனுக்கும் இடையே ஏற்பட்ட போட்டியே வீரபாண்டியனை துருக்கியரின் துணையை நாடவைத்து மதுரையில் முஸ்லீம் ஆட்சி ஏற்பட வழிவகுத்தது.

சோழர்கள் மூவேந்தர்களில் பேரரசை நிறுவிய பேராளர்கள். புலிச்சின்னம் தேசியக்கொடியில் எழுதி கங்கையும் கடாரமும் ஈழமும் வென்று பேரரசினை வெளிப்படுத்தினர். விஜயாலயச் சோழன் முதல் ஆதித்தச் சோழன் சுந்தரச் சோழன் உத்தமச் சோழன் முதலாம் இராஜ இராஜன் முதலாம் இராஜேந்திரன் இரண்டாம் இராஜேந்திரன் ஆகியோர் கி. பி 1070 வரை ஆண்டனர். ஈழத்தை கைப்பற்றிய இராஜஇராஜ சோழன் அதனை மும்மணிச் சோழமண்டலமென சோழப்பேரரசின் ஒரு பகுதியாக 70 ஆண்டுகள் ஆட்சி செலுத்தினான்.

சோழப் பேரரசின் வீழ்ச்சியும் பாண்டியரின் எழுச்சியும் 13ம் நூற்றாண்டில் பாண்டிய அரசின் வீழ்ச்சியும் தமிழர்களின் அரசுக்கு முடிபினை உருவாக்கி மதுரையில் முஸ்லீம்களின் அரசாட்சிக்கு வழிவகுத்தது. இதன் பின்னணியில் இலங்கையிலும் யாழ்ப்பாண அரசு என்னும் தனியரசின் தோற்றம் 13ம்நூற்றாண்டில் ஏற்பட்டது.

**பெற்றோர்கள் ஆசிரியர்களுக்கு**

## யாழ்ப்பாண அரசர்கள் மற்றும் பண்டார வன்னியன் குறித்த சுருக்கக் குறிப்புகள்

### *1.விசய கூழங்கைச் சக்கரவர்த்தி:*

விசய கூழங்கைச் சக்கரவர்த்தி யாழ்ப்பாண அரசின் முதலாவது அரசன். கிறிஸ்துவுக்குப் பின்னர் 1215 முதல் 1240 வரை யாழ்ப்பாண அரசை விசய கூழங்கைச் சக்கரவர்த்தி ஆண்டார். இவர்களது அரச பரம்பரை ஆரியச் சக்கரவர்த்திகள் பரம்பரை என அழைக்கப்பட்டது. பாண்டிய மாமன்னருக்கு தளபதிகளாக இருந்து வந்த செவ்விருக்கை நாட்டுத் தமிழ் மறவர்கள் வரிசையில் வந்தவர்கள் இந்த ஆரியச் சக்கரவர்த்திகள். வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலே இலங்கையில் வாழ்ந்து வந்த தமிழீழத் தமிழர்கள் தங்கள் மண்ணின் பாதுகாப்புக்கு தமிழரல்லாதவர்களின் ஆக்கிரமிப்புக்களால் பாதிப்புக்கள் ஏற்பட்ட நேரத்தில் அவர்கள் பாண்டிய மாமன்னரின் உதவியை நாடினர். தமிழீழ

மக்களின் வேண்டுகோளின் பெயரிலும் பாண்டிய மாமன்னரின் கட்டளையாலும் ஆரியச் சக்கரவர்த்திகள் எனப்படும் இவர்கள் தமிழீழத்திற்கு வந்து தமிழீழத் தாயகத்தைப் பாதுகாத்து யாழ்ப்பாண அரசு என்ற தமிழீழ மக்களின் அரசினைத் தோற்றுவித்தனர்

இராமருக்கு அனுமான் இலங்கைக்குப் போகவென அமைத்த சேது அணையின் பெயரை ஆரியச் சக்கரவர்த்திகள் தங்கள் குலப்பெயராகக் கொண்டு சேதுகாவலர்கள் என்று அழைக்கப்பட்டனர். தமிழர்கள் தமிழீழம் உட்பட தென்னிந்தியா எங்கும் தமிழர்கள் என்ற தேசியத்துடன் வாழ்ந்த காலம் அது. தமிழர்களுக்கு எங்கு பாதிப்பு ஏற்பட்டாலும் சேர சோழ பாண்டிய மன்னர்கள் வழி வந்த வீரத் தமிழ் மறவர்கள் உடனே அங்கு சென்று உதவுவது தமிழர்களின் வீரப் பண்பு. முதலாவது செயவீரசிங்கையாரியன் என்ற பெயரும் கூழங்கைச் சக்கரவர்த்திக்கு உண்டு. கண்டி அரசன் முத்துச் சிலாபத்தைக் குறித்து கூழங்கைச் சக்கரவர்த்தியுடன் போருக்கு வந்த நேரத்தில் பாண்டியர் துணையுடன் கண்டி அரசனை எதிர்த்து வென்றவனாக கூழங்கைச் சக்கரவர்த்தி வரலாற்றில் புகழ் பெறுகிறான்.

## *2. குலசேகரசிங்கையாரியன்:*

இரண்டாவது யாழ்ப்பாண அரசன் குலசேகர சிங்கையாரியன். 1240 முதல் 1256 வரை இவர் தமிழீழ மண்ணை ஆண்டார்.

## *3. குலோத்துங்க சிங்கையாரியன்:*

குலசேகர சிங்கையாரியனின் மகன் குலோத்துங்க சிங்கையா ரியன் 1256 முதல் 1279 வரை மூன்றாவது யாழ்ப்பாண அரசனாக விளங்கினான்.

## *4. விக்கிரம சிங்கையாரியன்:*

விக்கிரமசிங்கையாரியன் நான்காவது யாழ்ப்பாண அரசன். 1279 முதல் 1302 வரை தமிழீழ மண்ணை ஆண்டவர். இவருடைய ஆட்சிக்காலத்தில் சிங்களவர்கள் தமிழர்களைத் தாக்கி இரு தமிழர்களைக் கொன்று சிலரைக் காயப்படுத்தி இனக்கலவரம் செய்ததாகச் சில குறிப்புகள் தெரிவிக்கின்றன. விக்கிரமசிங்கையாா-ரியன் அவ்வினக்கலவரத்தினை தலைமை தாங்கி நடாத்திய புஞ்சிபண்டா என்பவனுக்கும் வேறு பதினேழு பேருக்கும் மரணதண்டனை நிறைவேற்றிக் கலவரத்தை அடக்கினான். இதனால்

தமிழர் தாயகத்தில் குடியேற முனைந்த சிங்களவர்கள் மீளவும் தங்கள் பகுதிகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

### *5.வரோதய சிங்கையாரியன்:*

ஐந்தாவது யாழ்ப்பாண அரசன் வரோதய சிங்கையாரியன். இவருடைய காலத்திலேயே புகழ் பெற்ற செகராசசேகர மாலை செகராசசேகரம் போன்ற வைத்திய சோதிட நூல்கள் தமிழீழ மண்ணின் தலைமை இலக்கியங்களாக எழுதப்பெற்றன. பாண்டிய மன்னன் தில்லி சுல்தானின் படைகளினால் முடியிழந்த வேளை அவனுக்குப் பக்கத்துணையாக படைத்துணை அனுப்பிய பெருமை வரோதய சிங்கையாரியனுக்கு உண்டு. இதன் காரணமாக இந்தியாவில் இருந்து படையெடுத்து வந்தவர்களை கச்சாயில் வரோதய சிங்கையாரியன் முறியடித்தான். தமிழர் ஆட்சிக்கு அச்சுறுத்தலாக விளங்கிய அனுராதபுர சிங்களத் தலைநகரை அங்கிருந்து அகற்றிய வரலாறும் இவருக்கு உண்டு. சிங்கள அரசு கம்பளை நகரத்திற்கு அதனது தலைநகரை மாற்றிய பின்னர் அழகக்கோன் என்னும் கம்பளை அரசின் முதன்மை அதிகாரி கம்பளை அரசில் வரோதய சிங்கையாரியனின் ஆட்களைக் கொலை செய்ததை அடுத்து கடலாலும் தரையாலும் படைநடத்தி பாணந்துறையில் கடற்படையினை நிறுத்தி கம்பளை வரை தமிழராட்சியின் வலிமையை நிலைநாட்டிய வீரவரலாறுடையவராக வரோதய சிங்கையாரியன் புகழ்பெறுகிறார்.

### *6.மார்த்தாண்ட சிங்கையாரியன்:*

ஆறாவது யாழ்ப்பாணத்து மன்னன் மார்த்தாண்ட சிங்கையாரியன். இவர் இளவரசனாக இருந்த வேளையில் தென்னிலங்கை மீது படையெடுத்துச் சென்று சிங்களவர்கள் தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்க முயற்சித்தமைக்கு பதிலடி கொடுத்தார்.

### *7.குணபூஷண சிங்கையாரியன்:*

ஏழாவது யாழ்ப்பாணத்து அரசன் குணபூச சிங்கையாரியன் ஆவார்.

### *8.வீரோதைய சிங்கையாரியன்:*

எட்டாவது யாழப்பாணத்து அரசன் வீரோதய சிங்கையாரியன். இவருடைய ஆட்சிக்காலத்திலும் சிங்களவர்கள் கலகங்களை தொடங்கினர். அவர்களுக்கு உறுதுணை செய்த சில வன்னிச்

சிற்றரசர்களையும் இவர் அடக்க வேண்டி இருந்தமையினால் இவர் வன்னி மேல் படையெடுத்ததாகத் தெரிகிறது. இதன் பின்னர் இவரால் சிங்களவர்களின் கலவரங்கள் முறியடிக்கப்பட்டன. பாண்டியன் தன் அரசினைப் பறிகொடுத்து யாழ்ப்பாணத்திற்கு வந்து ஒளிந்திருந்த வேளையில் யாழ்ப்பாண அரசின் படைகளை மதுரைக்கு அனுப்பி அங்கு மீளவும் பாண்டிய ஆட்சி நிலைபெற வீரோதைய சிங்கையா ரியன் உதவினார்.

### *9.ஜெயவீர சிங்கையாரியன்:*

யாழ்ப்பாணத்தின் ஒன்பதாவது அரசன் ஜெயவீர சிங்கையாரியன்.

### *10.குணவீர சிங்கையாரியன்:*

யாழ்ப்பாணத்தின் பத்தாவது அரசன் குணவீர சிங்கையாரியன். இவருக்குத் திறை செலுத்த மறுத்த கண்டியரசனை எதிர்த்து யுத்தம் செய்து வெற்றி பெற்றதாக வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

### *11.கனகசூரிய சிங்கையாரியன்:*

யாழ்ப்பாணத்தின் பதினொராவது மன்னன் கனகசூரிய சிங்கையாா-ியன். இவருடைய காலத்தில்தான் 1450 ம் ஆண்டில் கோட்டைச் சிங்கள மன்னன் 6வது பாராக்கிரமபாகுவின் வளர்ப்புமகனான செண்பகப்பெருமாள் என்னும் சபுமால்குமரய யாழ்ப்பாண அரசை ஆக்கிரமித்தான். 17 ஆண்டுகள் அவனின் ஆக்கிரமிப்பில் யாழ்ப்பாண அரசு இருந்த காலத்தில் இவர் திருக்கோவலூரில் விஜயநகர பேரரசின் மன்னனாக இருந்த மலையமானுடன் சென்று தங்கி பாண்டிநாட்டுச் சிற்றரசர்களிடமிருந்து படைஉதவி பெற்று சிங்கள ஆக்கிரமிப்பாளருடன் போராடித் தாயகத்தை மீளவும் மீட்டெடுத்தார்.

### *12.பரராஜ சேகரன்:*

சிங்களவரான செண்பகப் பெருமாளின் ஆட்சியில் இருந்து மீளவும் யாழ்ப்பாண அரசை மீட்ட கனக சிங்கையாரியனின் மகன் பரராஜ சேகரன் யாழ்ப்பாண அரசின் 12 வது அரசன் . தமிழக மன்னர்கள் மக்கள் இவருடைய தந்தைக்கு யாழ்ப்பாணத்தை சிங்களவர்களிடம் இருந்து மீட்பதற்கு தந்த ஆதரவுக்கு நன்றியாக சிதம்பரத்தில் பரராஜசேகரன் மடம் என்ற ஒரு மடத்தையே இவர் நிறுவினார்.

## *13.முதலாம் சங்கிலி மன்னன்:*

பரராஜசேகரனின் அன்பு மகனும் போர்த்துக்கேயருக்கு எதிராகப் போராடி தமிழ் மக்களின் இதயங்களில் பெருமதிப்பை பெற்றவனுமான முதலாம் சங்கிலி மன்னன் யாழ்ப்பாணத்தின் 13வது அரசன். இவரது சிலைதான் நல்லூர் முத்திரைச் சந்தையிலே நிறுவப்பட்டுள்ள சிலை. 1505 இலே சிங்கள அரசில் வர்த்தகம் எனக் கால்பதித்த போர்த்துக்கேயர் கோட்டையைக் கைப்பற்றினர். 1543ல் யாழ்ப்பாண அரச கடற்பரப்பில் கரையொதுங்கிய போர்த்துக்கேயரின் கப்பலை முதலாம் சங்கிலி மன்னன் கைப்பற்றினான். இந்நேரத்தில் அதனை மீட்கவெனப் பேரம் பேசி வந்த போர்த்துக்கேயர் தங்களின் காலனித்துவக் கால்களை யாழ்ப்பாண அரசில் அகலப்பதிக்க முயன்றனர். அடுத்த ஆண்டில் மன்னாரில் கிறிஸ்தவ மதப் பரப்பலூடாக போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரச எல்லைகளுள் நுழைய முற்படுகின்றார்கள் எனச் சங்கிலி கேள்வியுற்றான். இதனால் மதம் மாறியவர்களையும் மதப்பரப்புரை செய்த குருவையும் மன்னார் தேவாலயத்தில் பூசை நடைபெற்ற வேளையில் சங்கிலி மன்னனின் படையினர் வெட்டிக் கொன்றனர். அரசனின் அதிகாரியாக மன்னாருக்கு இருந்த இளஞ்சிங்கனும் கொல்லப்பட்டான்.

இது அரசகுடும்பம் வரை தாக்கத்தை ஏற்படுத்தியது. அரசனின் சகோதரன் பரநிருபசிங்கன் இச்சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கத்தோலிக்க மதத்தை ஏற்று மதம் மாறினான். அக்காலத்தில் தமிழகத்தில் புனிதராகப் பயணம் செய்த பிரான்சிஸ் சேவியர் அவர்களின் பணிகளினால் நாட்டில் கிறிஸ்தவ மதத்தினை வரவேற்கும் போக்குத் தலைதூக்கியது. இந்த இக்கட்டான நிலையில் 1545ல் போர்த்துக்கேயரை எதிர்த்த சீதவாக்கை கண்டி கோட்டைச் சிங்கள அரசர்களுடன் முதலாம் சங்கிலியும் இணைந்து போரடினான். 1551ல் திருகோணமலையில் இருந்த வன்னிய அரசன் மரணமடைந்ததை அடுத்து அவனது எட்டு வயதுக் குழந்தையின் பேரால் ஒரு வன்னியன் ஆட்சி செய்யப் புறப்பட்ட வேளை முதலாம் சங்கிலி திருகோணமலை யாழ்ப்பாண அரசுரிமைக்குரியது என்பதை நிலைநாட்டினான். இதனால் அந்த வன்னியனும் கத்தோலிக்கத்தை தழுவிக் கொண்டான். 1552ல் சிங்கள மன்னன் தர்மபாலனின் தந்தை விதியப்பபண்டார போர்த்துக்கேயருக்கு அஞ்சி புத்தரின் தந்தத் தாதுவுடன் முதலாம் சங்கிலியிடம் வந்து புகலிடம் பெற்றான். முதலாம் சங்கிலியும்

அவருடன் இணைந்து தாக்குதல்களை மேற்கொள்ளத் திட்டமிட்டான். ஆயினும் எதிர்பாராத விபத்தில் விதியப்பண்டார இறக்க அவரின் நினைவாக அரசன் பூதவராயர் கோயிலை அவர் பெயரில் அமைத்து அவர் நினைவைப் போற்றினான். 1560ல் போர்த்துக்கேயரின் முதலாவது படையெடுப்பு முதலாம் சங்கிலி மேல் நடாத்தப்பட்டது. இவ்வேளை பிரதானிகளாக விளங்கிய பல தமிழ் உயர்சாதியினர் அரசனைக் காட்டிக் கொடுக்க முற்பட்டதினால் அவர்களை முதலாம் சங்கிலி சிரச்சேதம் செய்து பச்சிளைப்பள்ளி வரை பின்வாங்கினான். மன்னார் தீவு பிடிபட்டது. திருக்கேதீஸ்வரம் இடிக்கப்பட்டது. ஆயினும் முதலாம் சங்கிலியை வெல்ல முடியாத போர்த்துக்கேயர் சமாதான உடன்பாடு ஒன்றைச் செய்தனர். சமாதான உடன்பாடு அமுலாக்கப்படவில்லை. 1564ல் சிங்கள அரசனான மாயதுன்னைக்கு ஆதரவாக முதலாம் சங்கிலி ஆட்களை அனுப்பி போர்த்துக்கேயருக்கு எதிராகப் போரிட உதவினான். இவ்வாறாக போர்த்துக்யேரிடம பிடிபடாத மன்னனாகவே முதலாம் சங்கிலி வரலாற்றில் இனங்காணப்படுகிறான்.

## *14. பெரியபிள்ளை:*

1570ல் யாழ்ப்பாண அரசின் 13 வது அரசனாக ஆட்சிக்கு வந்த பெரியபிள்ளையது ஆட்சியிலேயே முதன் முதல் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசிடமிருந்து பத்துக் கொம்பன் யானைகளைத் திைறயாகப் பெற்றனர். மன்னாரில் இருந்த போர்த்துக்கேயரை வெளியேற்றத் தஞ்சை நாயக்கமன்னர்களிடம் இருந்து படைபெற்று மன்னாரை பெரியபிள்ளை தாக்கினான். மன்னாரில் போர்த்துக்கேயர்களை வெற்றிபெற முடியாவிட்டாலும் அவர்கள் மேல் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதில் பெரியபிள்ளை வெற்றி கண்டார்.

## *15. புவிராஜ பண்டாரம்:*

1565 முதல் 1570 வரை யாழ்ப்பாண அரசின் 14 வது அரசனாகத் திகழ்ந்த புவிராஜ பண்டாரம் போர்த்துக்கேயருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டவன். 1590ல் மீளவும் மன்னாரைத் தாக்கினான். போர்த்துக்கேயருக்கு எதிரான கள்ளிக்கோட்டை சமோரினுடைய படை உதவிகளை புவிராஜபண்டாரம் பெற்றார். இதனால் போர்த்துக்கேயர் 1591ல் இரண்டாவது படையெடுப்பை யாழ்ப்பாண அரசின் மேல் நடாத்தி புவிராஜ பண்டாரத்தைக் கொன்றனர். இவரின் தலையை ஈட்டியில் குத்தி மக்கள் பார்வைக்கு வைத்து மக்களை அச்சப்படுத்தினர்.

### 16. எதிர்மனசிங்கம்:

படையெடுப்பின் பொழுது போர்த்துக்யேர் கைது செய்து பின்னர் அவர்களின் நிபந்தனைக்கு உட்பட்ட யாழ்ப்பாணத்தின் 15வது அரசனாக எதிர்மனசிங்கத்தை நியமித்தனர். இவன் மறைமுகமாக தமிழையும் சைவத்தையும் வளர்த்தான். கண்டிச் சிங்கள மன்னர்களுக்குப் போர்த்துக்யேருடன் போராட படை உதவி அனுப்பினான். ஆயினும் யாழ்ப்பாண பிரதானிகள் இவருடைய காலத்தில் தான் நல்லூரில் சமாதான உடன்படிக்கையை போர்த்துக்கேயருடன் செய்தனர். இந்த சமாதான ஒப்பந்தமே யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சிக்கான அத்திவாரம். 1617ல் நான் நோய்வாய்ப்பட்டு இறக்கும் நேரத்தில் தனது மூன்று வயது மகனுக்கு அரசுரிமையை வழங்கி தனது சகோதரனைப் பாதுகாவல் அரசனாக நியமித்தான்.

### 17.இரண்டாம் சங்கிலி மன்னன்:

17வது யாழ்ப்பாண அரசன் சங்கிலி குமாரன். மூன்று வயது குழந்தைக்கு முடிசூட்டியதால் தேசம் நெருக்கடியைச் சந்தித்த வேளையில் பொம்மை ஆட்சியா என வெகுண்டெழுந்த சங்கிலி குமாரன் அரசுக்குரியவனாக இல்லாத போதிலும் அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர்களைக் கொன்று அரசனானான். இவன் இரண்டாவது சங்கிலி எனவும் அழைக்கப்பட்டான். போர்த்துக்கேயர் இவனை ஏற்கவில்லை. ஒருபுறத்தில் சட்டரீதியான மன்னர் குடும்பத்தினரை ஆதரிப்பவர்கள். மறுபுறத்தில் முதலிமார்களின் எதிர்ப்பு. கூடவே போர்த்துக்யேரின் வருகையை வரவேற்பவர்கள். இவ்வாறான உள்நாட்டுப் பகைமைகளில் சங்கிலி குமாரன் சிக்குண்டு தவித்தான். இதனைப் பயன்படுத்தி போர்த்துக்யேர் படை எடுத்து 1619 ம் ஆண்டு இரண்டாவது சங்கிலியைச் சிறைப்படுத்தினர். அன்று முதல் யாழ்ப்பாண அரசு தனது இறைமையை இழந்தது.

### 18.பண்டார வன்னியன்:

தமிழீழ அன்னையின் வீர மைந்தன். வன்னியின் இறுதி மன்னன் பண்டாரவன்னியன். 1621 உடன் யாழ்ப்பாண அரசர்களின் இறைமை பறிக்கப்பட்டாலும் வன்னி மக்கள் தங்கள் மண்ணின் இறைமையை 1803 அக்டோபர் 31 வரை கட்டிக்காத்தனர். அந்த வன்னி வீரமைந்தர்களின் கடைசி அரசானாகத் திகழ்ந்தவன் பண்டார

வன்னியன். 1803 அக்டோபர் 25ல் கப்டன் வொன் டிறிபேர்க்குடன் செய்த யுத்தத்தில் வெள்ளையர்களின் ஆயுதங்களை பண்டார வன்னியன் அழித்தான். நிராயுதபாணியாக நின்ற கப்டன் வொன் டிறிபேர்க்கை தமிழ்ப் பண்பாட்டின்படி கொல்லாது தப்பிச் செல்லவிட்டான் ஆயினும் 1803 அக்டோபர் 31ல் மீளவும் கப்டன் வொன் டிறிபேர்க் பண்டார வன்னியன் மீது போர் தொடுத்தான். இப்போரில் பண்டாரவன்னியன் முச்சக்கர வண்டிகளில் பொருத்தப்பட்டு இருந்த அவர்களின் மூன்று பீரங்கிகளுடன் காட்டுக்குள் தப்பியோடினான். 1811ம் ஆண்டு உடையாவூரில் படுகாயம் அடையும் வரை வன்னி மண்ணில் இருந்து ஆங்கிலேயரை வெளியேற்ற பண்டார வன்னியன் கரந்தடித் தாக்குதல்கள் பலவற்றை நடாத்தினான்.

1811ல் பண்டார வன்னியனின் மரணத்தின் பின் அவனின் அன்புக்காதலி குருவிச்சி நாச்சியாரும் அவளின் தோழியும் சம்மளங்குளத்தில் கார்த்திகைக் கிழங்கை அரைத்துத் தின்று மரணத்தைத் தழுவிக்கொண்டனர். பேராற்றின் கிளையில் பண்டாரவன்னியனதும் காதலியினதும் அவளின் தோழியினதும் சடலங்கள் விடப்பட்டதால் அந்த ஆறு பண்டாரவன்னியனின் காதலி நினைவாக இன்று வரை குருவிச்சியாறு என வழங்கப்பட்டு வருகிறது. பண்டார வன்னியன் நினைவாக அவனுடன் கப்டன் வொன் டிறிபேர்க் சண்டையிட்ட புளிய மரத்தடியில் ஆங்கிலேயர் கப்டன் வொன் டிறிபேர்க் 1803 அக்டோபர் 31ல் பண்டார வன்னியனைத் தோற்கடித்ததாக நடுகல் நட்டு வைத்துள்ளனர். ஆனால் மக்கள் பண்டார வன்னியன் பிடிபடவில்லையென்றே இன்று வரை நம்புகின்றனர்.

## சிறிலங்காவில் தமிழர் கலாச்சார வாழ்வு

நிலஅளவையியல் புவியியில் சுற்றாடலியல் ஆகியவற்றின் அடிப்படையில் சிறிலங்கா இந்திய உபகண்டத்தின் பகுதியாகவும் தொகுதியாகவும் உள்ளது. சிறிலங்காவுக்கும் தெற்காசியாவுக்கும் குறிப்பாகத் தென்இந்தியாவுக்கும் இடையில் உள்ள நெருக்கங்கள் காரணமாக சிறிலங்கா தெற்காசியாவுக்கான குறிப்பாகத் தென்னிந்தியாவுக்கான சட்டகங்களுள் அடங்குகிறது.

சிறிலங்காவில் உள்ள தமிழ் சிங்கள கலாச்சாரங்கள் இரண்டுமே தமிழ் தெலுங்கு கன்னடம் மலையாளம் ஆகியவற்றின் அபிவிருத்திகளுக்குச்

சமாந்திரமான வளர்ச்சிகளைக் கொண்டுள்ளது. இம்மொழிகளுக்கும் இலங்கையில் காணப்படும் சிங்கள தமிழ் மொழிகளுக்குமிடை ஒரு பொதுத்தன்மையை நிறுவமுடியும். தூரதிருஸ்டவசமாக இப்படியான ஒப்பீட்டு அடிப்படையிலான ஆய்வுகள் பல்வேறு காரணங்களால் இதுவரை நடாத்தப்படவில்லை.

ரேய் சௌத்திரியின் தெற்காசிய மக்கள் குறித்த மானிடவியல் ஆய்வுகள் தென்னிந்தியர்களுக்கும் சிங்களம் தமிழ் பேசும் சிறிலங்காவில் உள்ள மக்களுக்கும் இடையுள்ள பரம்பரைத் தொடர்புகளைச் சுட்டிக்காட்டியுள்ளது. அவ்வாறே இன்று சிங்களவர்களின் மூதாதையர்கள் என மகாவம்சம் கூறும் வடமேற்கு இந்தியர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையில் நடாத்தப்பெற்ற இரத்தத் தொடர்புகள் தொடர்பான ஆய்வுகளில் சிங்களவர்களின் இரத்தத்திற்கும் அவர்களின் இரத்தத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லையெனக் கண்டறியப்பட்டு உள்ளது.

மேலும் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையிலேயே இரத்தத் தொடர்புகள் இருப்பது ஆய்வுகள் மூலம் உறுதியாகியுள்ளது. இதனால் சிறிலங்காவில் உள்ள தமிழர்களும் சிங்களவர்களும் ஒரே ஆதிக்குடியில் இருந்தே தோற்றம் பெற்றவர்கள் ஒரே கலாச்சாரத்திற்குச் சொந்தக்காரர்களாக ஆரம்பத்தில் இருந்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

ஆயினும் இலங்கை சிறிலங்கா எனச் சிங்களத்தில் இன்று அழைக்கப்படுகிறது. சிலோன் என முன்னர் ஆங்கிலத்தில் அழைக்கப்பட்டது. தமிழில் ஈழம் என்ற சொல் முழு இலங்கையையும் குறிக்கும் மற்றொரு சொல்லாகும். இந்த இலங்கைத்தீவு இந்திய உபகண்டத்தின் தெற்கு பக்கமாக இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ளது. 22 மைல் நீளமான பாக்குநீரிணை என்றழைக்கப்படும் நீரிணையால் இலங்கை இந்திய உபகண்டத்தில் இருந்து பிரிக்கப்பட்டுள்ளது.

கற்கடக ரேகைக்கு வடக்காக 6 பாகைக்கும் 10பாகைக்கும் இடையில் அகலக் கோட்டில் கிழக்காக 79 முதல் 81 பாகைகளுக்கும் இடையில் உள்ளது இலங்கை. இதனுடைய பரப்பு 25 332 சதுர மைல். இதில் சிறிலங்கா என்னும் சிங்கள மக்களின் தாயகம் 18402 சதுரமைல் பரப்பையும் தமிழீழம் என்னும் தமிழர் தாயகம் 7290 சதுரமைல் பரப்பையும் கொண்டுள்ளது

இலங்கையின் மொத்த சனத்தொகை 1710300 என 1991ம் ஆண்டு சனத்தொகை கணிப்பு தெரிவிக்கிறது. இதில் 12656000 சிங்களவர்களும் 3113000 தமிழர்களும் 1214000 தமிழ் பேசும் முஸ்லீம்களும் 120000 மற்றைய இனத்தவர்களும் அடங்குகின்றனர். தமிழர்கள் ஆக குறைந்தது 25000 ஆண்டுகால வரலாறு உள்ள பழமைமிகு மக்கள். தமிழ் உலகின் முதல் ஐந்து பழமைமிகு மொழிகளில் ஒன்று. தமிழர்களுடைய செம்மையான இலக்கியம் சங்கத் தமிழ் என அழைக்கப்படும். தரமானதும் படைப்பாளர்களின் கலைத்துவம் மிக்கதுமான கவிதைகளின் தொகுப்பே சங்கத் தமிழ் எனப்படும். இக்கவிதைகள் கிறிஸ்துவுக்குப் பின்னர் 1 முதல் 3ம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தன எனக் கருதப்படுகிறது. இந்தக் கவிதைகள் தமிழரின் உயர்நாகரீகத் தன்மைகளையும் பழந்தமிழர்களின் பிரமிக்கத்தக்க இலக்கிய சாதனைகளையும் வெளிப்படுத்துகின்றன.

சிங்களவர்கள் தங்களின் வரலாறு வங்காளத்திலிருந்து வந்த இளவரசர் விஜயனின் வருகையுடன் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமாகியதாக கூறுகின்றார்கள். 6வது நூற்றாண்டில் மகாநாமனால் எழுதப்பட்ட மகாவம்சத்தின் பதிவுகளின் படி புத்தர் பரிநிர்வாணமடைந்த தினத்திலேயே விஜயன் இலங்கைக்கு வந்தான் எனக் கருதப்படுகிறது. ஆயினும் கிறிஸ்துவுக்கு முன் 500 ஆண்டுகாலத்திற்கு முன்னரே இலங்கையில் உயர் நாகரீகமுள்ள மக்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு தொல்பொருள் வரலாற்றுச் சான்றுகள் உண்டு.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை எடுத்து நோக்கினும் 5000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த இலங்கை மன்னனான இராவணனுக்கும் ஆரிய இளவரசனான இராமருக்கும் இடை இராமனின் மனைவியாகிய சீதையைச் சிறைப்பிடித்தமை தொடர்பாக நடந்த யுத்தத்தை இராமாயணம் விளக்குகிறது. இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஜவர்ஹலால் நேரு இந்த இராம இராவண யுத்தத்தை ஆரியருக்கும் திராவிடருக்குமிடை நிகழ்ந்த யுத்தமாகவே தனது உலக வரலாற்றின் பெருமைகள் என்ற நூலில் கூறுகின்றார்.

இராவணன் இறந்த பின் கி மு 2367 அளவில் அவனின் தலைநகரான இலங்காபுரி கடல்கோளால் அழிந்து விட்டதாக விட்டி பொத

என்னும் சிங்கள நூல் கூறுகிறது.

கிமு 483 அளவில் விஜயன் இலங்கைக்கு வந்ததாகச் சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அவர் இலங்கைக்கு வரு முன்னரே ஐந்து ஈஸ்வரங்கள் இலங்கையில் காணப்பட்டன என்பது வரலாற்று ஆய்வாளர் கருத்து. திருக்கேதீஸ்வரம் மகாதித்தவுக்கு அருகிலும் முனீஸ்வரம் முத்துக்குளிப்புத்துறையான சிலாபத்துறைக்கு அருகிலும் தொண்டேஸ்வரம் மாந்தோட்டைக்கு அருகிலும் திருக்கோணேஸ்வரம் கொட்டியாரக் குடாவுக்கு அருகிலும் நகுலேஸ்வரம் காங்கேசன்துறைக்கு அருகிலும் இருந்தன என்பது வரலாற்றுச் செய்தியாக உள்ளது. இவைகளைக் கொண்டு பார்க்கையில் விஜயன் இலங்கைக்கு வருமுன்னரே இலங்கையில் உயர் நாகரீகம் கொண்ட மக்கள் வாழ்ந்தனர் என்பது தெளிவாகிறது.

**16 வயதினர்க்கு மேற்பட்டவர்க்கு - கட்டுரைப் பயிற்சி**
**நாம் அறியாத தமிழ்ப் பெரியார்கள் 1**

## ஈழத் தமிழ்ப்புலவர் வரலாற்றை முதன் முதலில் தொகுத்த சைமன் காசிச் செட்டி (1807-1852)

சைமன் காசிச் செட்டி என்றால் இன்றைய தமிழீழ மக்களுக்குப் பலருக்குத் தெரியாத ஒரு பெயராக உள்ளது. ஆனால் இவர்தான் ஈழத்து தமிழிலக்கிய வரலாற்றில் நமது புலவர்கள் குறித்த தொகுப்பினை முதன் முதலில் நவீன காலத்திற்கு ஏற்றவகையில் வெளியிட்டவர். அத்துடன் தமிழர்களின் அடையாள அரசியலிலும் மிகவும் முக்கியமானவர்.

சைமன் காசிச் செட்டி கற்பிட்டியில் 1807 மார்ச் மாதம் 21 ம் நாள் பிறந்த தமிழ்ப் பெரியார். புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராகத் தனது தொழிலை இவர் ஆரம்பித்தார். தனது திறமையினாலும் உழைப்பினாலும் 1833ல் மாவட்ட முதலியாராகவும் புத்தளத்தின் மணியக்காரனாகவும் நியமிக்கப்பட்டார். முதலியார் என்பது ஒருவரின் சேவைக்காக அரசாங்கம் அவருக்கு அளிக்கும் சமுக உயர்நிலைகளில் ஒன்று. மணியக்காரன் என்பது ஊருக்குத் தலைவன் என்கிற நிலை. இவ்வாறு பெயரும் புகழும் பெற்ற இவர் 1838ம் ஆண்டில் இலங்கையின் சட்டவாக்க சபைக்குத் தமிழரின் பிரதிநிதியாக பிரித்தானிய ஆளுநரால் நியமிக்கப்பட்டார். 1845 வரை

இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதியாகத் திகழ்ந்த இவர் தமிழரின் தேசியத்தன்மை தாயகத்தன்மை குறித்த அருமையான ஆய்வுகள் பலவற்றை ஆதாரச் சான்றுகளுடன் வெளியிட்டார். பின்னர் அரசப்பணியில் சிலாபத்தின் மாவட்ட நீதிபதியாக 1852 வரை பணியாற்றிய இவர் 45 வயதில் மரணமடைந்தமை தமிழுலகிற்குப் பேரிழப்பாக அமைந்தது. 1824ம் ஆண்டில் அதாவது 17 வயதில் இலங்கையில் உள்ள இனங்களின் தொடக்கம் குறித்த தேடல்களும் ஊர்ப்பெயர்கள் தோன்றிய விதங்களைக் கண்டறியும் ஆவலும் இவரில் முளைவிட்டது. இதனால் இவர் இயற்கையான ஆய்வாளராக வெளிப்பட்டார்.

ஆதிகாலம் முதல் டச்சுக்காரர் கைப்பற்றும் வரை யாழ்ப்பாணத்தின் வரலாறு (History of Jaffna from the earliest period to the dutch conquest) என்னும் இவரின் நூல் எங்கள் தாயகத்தின் வரலாற்று ஆய்விற்கு வித்திட்டது.

இவர் தமிழ் புலவர் வரலாற்றை தமிழ் புு;டார்ச் (Tamil Plutarch) என்ற பெயரில் முதன் முதலில் நூலாகத் தொகுத்தார். Plutarch என்னும் கிரேக்கச் சொல் சமுகத்தில் புகழ்படைத்தவர்களாக வாழ்ந்தவர் என்பதைக் குறிக்கும். பின்னர் மேற்குலகில் பெரியார்கள் புலவர்கள் சாதனையாளர்கள் குறித்த வாழ்க்கைக் குறிப்புக்களை எழுதும் பொழுது தொகுக்கும் பொழுது அத்தொகுப்புக்கு Plutarch என்று பெயரிடும் வழமை வந்தது. இந்தப் பின்ணியில் தமிழ்ப் புலவர்கள் குறித்த தமது தொகுப்புக்குச் சைமன் காசிச்செட்டி தமிழ் பு;டார்ச் என்று பெயரிட்டார். இந்தத் திரட்டு ஈழத் தமிழ் இலக்கிய வரலாற்றுக்கான அடிப்படை நூல்களில் ஒன்றாக உள்ளது.

இவரால் எழுதப்பெற்ற பல ஆய்வுப் படைப்புக்கள் தமிழரின் சமுக அரசியல் ஆன்மீக அடையாளங்களை உலகிற்கு வெளிப்படுத்தும் ஆதாரச் சான்றுகளாக இன்றும் இலங்குகின்றன.

**கட்டுரைப் பயிற்சி -நாம் அறியாத தமிழ்ப் பெரியார்கள் 2**
**16 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு:**

## உதய தாரகை ஜே ஆர் ஆர்னோல்ட் (1820-1898)
## தமிழீழ இலக்கிய உலகின் உதயதாரகை

ஈழத்தமிழ் இலக்கிய உலகில் இன்று பலருக்கும் தெரியாத ஆனால் ஈழத்தமிழிலக்கிய உலகிற்கு அளப்பரிய பங்களிப்பினை நல்கிய பெரியார் ஜே ஆர் ஆர்னல்ட் எனத் தமிழீழ இலக்கிய உலகு போற்றும் அருணாசலம் சதாசிவம்பிள்ளை 11 அக்டோபர் 1820ல் மானிப்பாயில் உள்ள நவாலியில் பிறந்தார். வட்டுக்கோட்டைச் செமினரி என அன்று அழைக்கப்பட்ட இன்றைய யாழ்ப்பாணக் கல்லூரியில் இவர் படித்துக்கொண்டிருக்கும் பொழுதே 1835ல் இவர் சீர்திருத்தக் கிறிஸ்தவராக மாறி ஜே ஆர் ஆர்னால்ட் என்கிற கிறிஸ்தவப் பெயரைத் தனது பெயராக்கிக் கொண்டார். 1840ல் மானிப்பாய் மெமோரியல் பாடசாலையில் பட்டதாரி ஆசிரியராகத் தனது வாழ்வைத் தொடங்கிய இவர் சாவகச்சேரி ஆங்கில மிசன் பாடசாலை உடுவில் ஆங்கிலப் பாடசாலை உடுவில் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். ஆறுமுகநாவலர் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட நற்செய்தியின் தமிழ் மொழிபெயர்ப்பை மீள்நோக்கு செய்வதற்காக இவர் சென்னை சென்று பணியாற்றியதாகவும் தெரிகிறது. 1850ம் ஆண்டில் இவரால் இயற்றப்பட்ட இயேசுவைக் குறித்த நூறுபாடல்களைக் கொண்ட திருச்சதகம் வெளிவந்தது. தொடர்ந்து 1852ல் நற்செய்தியில் இடம்பெற்ற செய்திகள் சிலவற்றை மெய்வேதசாரம் என்ற கவிதை நூலாகவும் வெளிக்கொணர்ந்தார். 1857ம் ஆண்டு யூன் மாதம் 1ம் நாள் உதயதாரகை பத்திரிகையின் தமிழ்ப்பகுதியின் ஆசிரியர் பதவியை ஏற்ற இவர் 1858ல் அகிலத்தின் வரலாறு (ருளைைநசளயட ர்ளைவழசல) என்கிற இதிகாசத்தை தமிழில் வெளியிட்டு உலக வரலாற்றை வெளியிடும் துறையின் முன்னோடியாகவும் புகழ்கொண்டார். 1859ல் நன்னெறிக் கொத்து என்னும் நல்வழிகாட்டு நூலை வெளியிட்டார் இதனுடைய இரண்டாம் தொகுதியை 1893ல் வெளியிட்டதாகத் தெரிகிறது. 1861ல் வானசாத்திரம் என்னும் நூலை வெளியிட்டார். 1864ல் உதயதாரகை ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியராகவும் பொறுப்பேற்றார். 1869ல் நன்னெறிக் கதைகள் அடங்கிய நன்னெறிக் கதா சங்கிரகம் என்னும் கதைத்தொகுதியைப்

பதிப்பித்தார். இவரின் சிறுகதைகள் அடங்கிய பதிப்பொன்றும் இவரின் எழுத்தாற்றலை வெளிப்படுத்தி நிற்கிறது.

1872ல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நிறுவப்பட்டது. அதற்கு முன்னர் 1823 முதல் 1855 வரை வட்டுக்கோட்டைச் செமினரி (குருமடம்) என்ற பெயரிலேயே வட்டுக்கோட்டைக் கல்லூரிக்கான ஆரம்பநிலையம் இயங்கியது. 1881ல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தமிழ் இலக்கியப் பேராசிரியராக நியமனம் பெற்ற ஆர்னல்ட் 1886ல் பாவலர் சரித்திர தீபகற்பம் என்ற பெயரில் தமிழ்ப் புலவர்கள் குறித்த நூலை வெளியிட்டார். இன்று வரை நம்முன்னோர் பலரின் வரலாற்றுக் குறிப்புக்களை அறிய இந்நூலே உதவுகிறது. 1887ல் இவரால் இல்லற நொண்டி என்னும் ஒரு செய்யுள் நூலைத் தமிழ்க் குடும்பங்களில் பேணப்பட வேண்டிய விழுமியங்களைக் குறித்து நொண்டிச்சிந்து பாவடிவில் எழுதினார். குடும்பங்களில் இல்லற நெறி பேணப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி குடும்ப தர்ப்பணம் என்னும் நூலையும் இவர் எழுதியதாகத் தெரிகிறது. 1896ம் ஆண்டு பெப்ருவரி 20ம் திகதி தனது 76வது வயதில் இத்தமிழ்ப் பெரியார் இறைவனடி சேர்ந்தார்.

**கட்டுரைப் பயிற்சி நாம் அறியாத தமிழ்ப் பெரியார்கள் 3**
**ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருக்கு:**

## முதுதமிழ்ப் புலவர் நல்லதம்பி

வண்டலைந்து தேனார வரிக்குயில்களிசை பாட - மயில்களாடுந் தண்டலை சூழ் - வட்டுநகர்த் தமிழ்ப் புலவன் நல்லதம்பி தந்த பாடல் உண்டவர்க்கு - நறுந்தேனும் செழுங்கனியுமெந்நாளு முவர்க்குமையா எனத் தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவரின் மகன் பண்டிதர் இளமுருகனார் பாடி மகிழ்ந்த தாயகத்து மகாகவி முதுதமிழ்ப் புலவர் முருகுப்பிள்ளை நல்லதம்பி அவர்கள் குறித்த அறிவு இன்றைய தமிழீழ மக்களில் பலருக்கு தெரியாது. அவர் குறித்த பார்வையினை அகலப்படுத்த இக்கட்டுரை உதவுமென நம்புகிறேன்.

நல்லதம்பிப் புலவர் அவர்கள் 1896ம் ஆண்டு செப்டெம்பர் 13 முதல் 1951ம் ஆண்டு மே மாதம் எட்டாம் நாள் வரை 55 ஆண்டுகாலப் பெருவாழ்வை கொண்டிருந்தார். நல்லதம்பிப் புலவரின் சமகாலத்தவர்களுள் 1875 முதல் 1947 வரை வாழ்ந்த பன்மொழிப்

புலவரும் ஆய்வாளருமான சுவாமி ஞானப்பிரகாசர் - 1878 முதல் 1953 வரை வாழ்ந்த தங்கத்தாத்தா எனத் தாயகம் போற்றிய நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் - 1892 முதல் 1947 வரை வாழ்ந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் - 1899 முதல் 1992 வரை வாழ்ந்த பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

நல்லதம்பிப் புலவர் 1930 வரை சேர் பொன்னம்பலம் இராமநாதனின் அரசியல் தலைமையையும் 1933 முதல் 1951 வரை ஜி ஜி பொன்னம்பலத்தின் அரசியல் தலைமையையும் கண்டு வாழ்ந்து உள்ளார். 1949ல் தந்தை செல்வாவின் அரசியல் தலைமை கருக்கொண்ட போதிலும் அதன் தாக்கம் வலுப்பெறுவதற்கு இடையில் 1951ல் புலவர் இறைபதம் அடைந்து விட்டார்.

ஆயினும் தந்தை செல்வாவுக்குத் தேசிய உணர்ச்சியை ஊட்டிய தெல்லிப்பளையிலேயே நல்லதம்பிப்புலவரும் கல்வி பயின்றமை முக்கியமான விடயம். 1907ல் யாழ்ப்பாணம் அன்றும் இன்றும் என்ற கட்டுரையை சிலோன் நசனல் ரிவியூ சஞ்சிகைக்கு எழுதி தமிழர்களுக்கு எனத் தனியான ஒரு வரலாறு கலாச்சாரப்பின்னணி உண்டு என்று காட்டியதன் மூலம் தமிழ்த் தேசியத்தின் நிறுவனப்பட்ட வளர்ச்சிக்கு வித்திட்ட பாவலர் துரையப்பாப்பிள்ளை அவர்கள் 1910ல் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியை நிறுவி அதனைச் சந்ததிக்கடமையாக்கிச் சென்றார். இதனால் தெல்லிப்பளை தமிழுணர்வின் கல்வித்தளமாக விளங்கியது.

அவ்வாறே இக்காலகட்டத்தில் சீர் திருத்தக் கிறிஸ்தவர்களாக மாறிய பலர் மீளவும் சைவத்தை ஏற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்க மாற்றம். கிங்ஸ்பரி - கறல் - பெரியநெவின்ஸ் - என்ற கிறிஸ்தவப் பெயருடன் திகழ்ந்தவர்கள் மீளவும் தாமோதரம்பிள்ளை- விசுவநாதபிள்ளை- சிதம்பரப்பிள்ளை என மாறி சைவத்தின் எழுச்சிக்கான பணிகளில் இறங்கினர். இதனால் நல்லதம்பிப் புலவர் அவர்களின் இளமைக்காலம் தமிழிற்கும் சைவத்திற்கும் பணிகள் செய்வதின் மூலம் பண்பாட்டு மீட்டுணர்வினால் தாயகத்திலிருந்து அந்நியரை வெளியேற்றும் முயற்சிகளின் வரலாற்றுக்காலமாகக் காட்சி அளித்தது.

நல்லதம்பிப் புலவரின் குடும்ப அமைப்பும் தமிழ் உணர்வும் சைவப்பற்றும் அவரில் வேர் கொள்வதற்கு ஏற்றதாகவே காணப்பட்டது.

புலவரின் தந்தை முருகுப்பிள்ளை திண்ணைப்பள்ளி ஆசிரியர் என்றும் முருகபக்தர் என்றும் தாயர் தங்கம்மையார் ஆசாரசீலராக விளங்கினார் என்றும் குடும்பத்தில் ஏழாவது பிள்ளையாக புலவர் பிறந்தார் என்றும் அவரின் குடும்ப வரலாற்று குறிப்புக்களினுடாக அறிகின்றோம். இதனால் சிறுவயது முதலே தமிழ்ப் புலமையும் சைவப்பெருமையும் இணைந்து உயரும் தன்மையை நல்லதம்பிப் புலவருக்கு அவரின் குடும்ப அமைப்பு உருவாக்கி கொடுத்திருக்கும் என்பதை ஊகிக்கக் கூடியதாக உள்ளது. ஆயினும் பதினொரு வயதில் தந்தையை இழந்த நல்லதம்பிப் புலவர் சகோதரர் ஆசிரியர் நாகலிங்கம் அவர்களின் பொறுப்பிலேயே கல்வியினைத் தொடர்ந்தார் எனத் தெரிகிறது. இக்காலகட்டத்திலேயே நல்லத்தம்பிப் புலவர் செய்யுள்கள் புனையத் தொடங்கினார் என்பதில் இருந்து புலவருக்கு இளமை முதலே உணர்வு கொண்டு யதார்த்தத்தை தரிசித்து அதனை கவிதாக்காட்சியாக்கும் ஆற்றல் பெருகத் தொடங்கி உள்ளது என்பது தெளிவாகிறது. இதனையே நான் நல்லதம்பிப் புலவரின் பேராற்றலாகக் கருதுகிறேன். கண்டதைக் கவிதையாக்கும் அற்புத சக்தியில் கம்பனையும் விஞ்சும் கவிவளத்தன்மை உடையவராக நல்லத்தம்பிப் புலவர் இலங்குகின்றார்.

உதாரணமாக இறைவனைப் பற்றிய ஒரு பாடல் விளக்கமுடியா விளங்கமுடியா இறை தத்துவத்தை எவ்வாறு தத்தை தமிழில் தாங்கி வருகிறது என்பதை எடுத்து நோக்கலாமென எண்ணுகின்றேன்.

***உலகத்தைப் படைத்திட்ட பெருமானே***
***உயிர்களைக் காத்தருள் புரிவானே***
***ஏழைகள் வடிவாய் இருப்பானே***
***இனியவர் தம்மேல் விருப்பானே***

***அழகிய உடம்பிது தந்தானே***
***அன்பர் உளத்தில் இருந்தானே***

***வித்தையும் புத்தியுந் தரவேண்டும்***
***வேண்டிய செல்வமுந் தரவேண்டும்***

***நல்ல மனத்தையுந் தரவேண்டும்***
***நல்ல குணத்தையுந் தரவேண்டும்***

***நித்தமும் உடல் நலந் தரவேண்டும்***
***நீடிய ஆயுளுந் தரவேண்டும்***

இவ்வாறாக இறைவன் எட்டாத தூரத்தில் இல்லை எங்கள் வாழ்வின் சத்தாகச் சொத்தாக எம்முடனேயே உறைபவன் என்ற உன்னதமான கருத்தை தெள்ளத்தெளிந்த தமிழில் அனைவருக்கும் விளங்குமாறு நல்லதம்பிப் புலவர் எடுத்து விளக்குகையில் பாரதி போல மற்றொரு மகாகவியாக மாறிக்கொள்கின்றார். ஆனால் பாரதியை விட மேலாக எளிமையான தமிழ் நடையை நல்லதம்பிப் புலவர் எல்லா பாவடிவங்களிலும் கையாள்கின்றார்.

*அன்பினுக்குள் ளன்பாகி அகத்திருக்கும் அன்பே*
*அறிவினுக்குள் ளறிவாகி யமர்ந்திருக்கும் அறிவே*
*இன்பினுக்குள் ளின்பாகி இயைந்து நிற்கும் இன்பே*
*எளியருக்குத் துணையாகி எழிலளிக்கும் எழிலே*
*கன்மனத்தைக் கனியவைக்கும் கருணைமலி கனியே*
*கவலையிலா வாழ்வு தந்து காக்குமுயிர் மணியே*
*நின்பதத்தை வேண்டிநின்றோம் நீடுநலனருளே*
*நித்தியமாய் நின்மலமாய் நிலவு பரம்பொருளே*

என்ற பாடலிலே சந்தங்களும் யாப்புகளும் இலக்கணமும் எளியமொழி எளிய நடைக்குக் கட்டுப்பட்டுச் செல்லும் சிறப்பைப் பார்க்கையில் நல்லதம்பிப் புலவர் பாரதியை விஞ்சும் தற்காலத் தமிழ்க்கவிதைத்துறையின் சாரதியாகக் காட்சியளிக்கின்றார்.

பாரதி இளைய சமுதாயத்தை இலக்கு வைத்துப் பாட்டெழுதியவன். அவ்வாறே நல்லதம்பிப் புலவரும் இளைய சமுதாயம் நெஞ்சுறுதி பெற்றெழப் பிஞ்சுக் குழந்தை முதல் கட்டழகுக் கன்னியர் காளையர் வரை கேட்டொழுக பாட்டமைத்த பெருங்கவி.

*பாலரெல்லாம் கூடுவோம்*
*பாட்டு நன்றே பாடுவோம்*
*காலைத்தூக்கி ஆடுவோம்*
*கையசைத்தே ஓடுவோம்*
*பள்ளிக் கூடம் செல்லுவோம்*
*பாடமெல்லாம் சொல்லுவோம்*
*மெள்ளவீடு நாடுவோம்*
*மேலும் விளையாடுவோம்*

என்ற புலவரின் பாப்பாப் பாடலிலே குழந்தை கல்வியிலும் கலைகளிலும் விளையாட்டிலும் தானாகவே கட்டுப்பாடின்றி இயல்புவளர்ச்சி பெறுவதற்கான சக்தியினைப் புலவர் குழந்தைக்கு அளிக்கின்றார். இந்த சுயத்தை நிர்ணயிக்கும் ஆற்றலை சுதந்திர உணர்வை அவரின் சிட்டுக்குருவி பாட்டிலும் தெளிவாக காணலாம்.

**இணைபிரியாதவைகள் தாமவை தம்பீ - துன்பம்**
**என்றுங் கொள்ளாதவைகள் தாமவை தம்பீ**
**துணிந்து பறந்து விளையாடுமே தம்பீ -என்றுஞ்**
**சோம்பலடைந்த தில்லைக் காணுவாய் தம்பீ**

இவ்வாறு சிட்டுக்குருவியின் சோடி வாழ்க்கையை குழந்தையின் கூடிவாழும் பண்பிற்கு அடித்தளமாக்கிய புலவர் அடுத்து

*தும்பு சருகுமுதலானவை கொண்டே- அவை*
*தூயமெல்லிய கூடு கட்டுதலுண்டே*
*நம்புகுளிர் வெயிலுக்கஞ்சியதில்லை - என்றும்*
*நலிந்து துயரங்கொண்டு வாடியதில்லை*

எனப்பாடி கிடைப்பன கொண்டு அடுக்கும் துன்பம் மாற்றி வாழும் மனநிலை குழந்தைகள் கொண்டிட அழைக்கின்றார். தொடர்ந்து

*கவலையின்றிக் கடவுள் பாதந்தேடியே- அவை*
*காலையெழுந் கீதமபாடும் நாடியே*
*அவைகளைப் போல நாமும் ஆடியே -என்றும்*
*அன்பு கூர்ந்து வாழ்ந்திடுவம் ஒன்று கூடியே*

எனப்பாடி கவலைகளுக்காக மட்டும் கடவுளைத் தேடுதல் என்னும் தப்பறை எண்ணத்தைக் குழந்தையின் மனதில் நின்று விலக்கிடும் புலவர் சுதந்திர உணர்வுக்கு உந்துதல் தருவது ஆன்மீகம் என்பதை எடுத்துரைக்க இந்த வாழ்வைத் தந்த இறைவனுக்கு குருவிகள் இயற்கையாகவே நன்றிக் கீதமிசைப்பதாகக் காட்டுகின்றார்.

சிட்டுக்குருவி காட்டும் போராடுவதற்காக வாழ்வு வாழ்வதற்காகப் போராட்டம் என்ற அந்த உணர்வு தான் எல்லாம் விதி எல்லாம் தெய்வசெயல் என்ற சோர்வினைத் தூரவீசி இடுக்கண் வருங்கால் நகுக என்னும் தத்துவத்தின் தளமாகிறது. போர் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று என்றால் அந்தப் போர் திணிக்கப்படாது இருப்பதற்கு

போராடும் வல்லமை என்றும் மனிதனுக்கு இருக்க வேண்டும் என்ற உண்மையை சிட்டுக்குருவியின் குளிர் வெயிலுக்கஞ்சாது கிடைக்கும் தும்பு சருகு கொண்டு போராட்டத்தளமமைக்கும் இயற்கை கொண்டு விளக்கிய புலவர் அந்த மனஉறுதி செயற்திறம் நாம் பெற்றால் நாமும் அடக்குமுறைகள் எதற்கும் முகங்கொடுத்து அடிமை உணர்வின்றி கவலையற்று ஒருவருக்கு ஒருவர் அன்பு கூர்ந்து வாழ்ந்திடலாமென்பது புலவரின் நுட்பமான விளக்கம்.

ஆயினும் இந்த மனிதாய அன்பினுக்கும் அப்பால் சூழலைப் பேணுதல் மனித எழுச்சிக்கு அவசியம் என்பதை விளக்கிட புலவர் அவர்கள்

*இந்தக் குருவிகளைக் கொன்றிட வேண்டாம் - கல்லால்*
*எறிந்து துயரஞ்செய்து தின்றிட வேண்டாம்*
*எந்தப் பிராணியையும் அன்பினுடனே - காத்தால்*
*இறைவனுனையுங் காப்பார் நம்புதிடனே*
*என்று எடுத்துரைக்கின்றார்.*
*அனலிட்ட மெழுகினைப் போல் குழைந்திடும்*
*அன்பினுக்கே யாங்கள் வசப்படுவோம்*
*மனதினிற் கறுப்பு வைத்தே ஒடுக்கிடும்*
*வஞ்சரை யெள்ளளவும் மதித்தல் செய்யோம்.*

என மனித நேயத்தை மனித விழுமியங்களை மக்களுக்கு பாட்டால் எடுத்து விளக்கும் புலவராக நல்லதம்பிப் புலவர் இலங்குகிறார்.

<u>உசாத்துணை நூல்கள்:</u>


1. பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் 20001 ஈழத்தமிழர் தொன்மை
2. கலாநிதி சி. க. சிற்றம்பலம் (பதிப்பாசிரியர்) 1992 யாழ்ப்பாண இராச்சியம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
3. திருமதி தனபாக்கியம் குணபாலசிங்கம் இலங்கையிற் தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாச்சாரமும்
4. ம. கங்காதரம் 2002 வித்தும் விழுதும் தமிழினம் அன்றும் இன்றும்
5. V. Muttucumaraswamy 1992 Department of Hindu Religious and Cultural

# தமிழர் நாட்டார் கலைகளும் விளையாட்டுக்களும்

## காவடியாட்டம்

காவடியாட்டம் தமிழர்களின் தொன்மையான நாட்டார் கலைகளில் ஒன்று. இன்று முருகவழிபாட்டுடன் தொடர்புடையதாக முருகனுக்கு நேர்த்திக் கடனாகவே பெரும்பாலும் காவடி எடுக்கப்படுகிறது. காவு தடி என்னும் பொருளில் காவடி என்பது பிறந்தது என்பர். சுமந்து செல்ல வேண்டிய பொருட்களை காவு தடியின் இரு அந்தங்களிலும் கட்டிவிட்டு அதனைத் தோளில் சுமந்து செல்லும் நெம்புப் பொறிமுறையினைத் தமிழர்களே கண்டு பிடித்தனர் என்பதற்கான உதாரணமாக உள்ள காவடி பழநி மலை முருகவழிபாட்டில் முருகனுக்கு உரியதாக இனங்காணப்படுகிறது. அகத்தியரிடம் சிவன் இரு தெய்வீக குன்றுகளைக் கொடுத்து அவற்றையும் தென்பொதிகையில் தமிழோடு சேர்த்து நிறுவும்படி கூறியதாகவும் ஆனால் அகத்தியர் முதலில் தனியாகவே பொதிகை வந்து தமிழ் பரப்பினார் எனவும் கூறப்படுகிறது. பின்னர் அகத்தியரின் சீடரான இடும்பன் இடம் தெய்வீக குன்றுகள் இரண்டையும் சுமந்து வரும்படி அகத்தியர் கட்டளையிட்டதாகவும் இதனை ஏற்று அகத்தியர் விட்டுச் சென்ற இரண்டு குன்றுகளையும் பிரம்மாவின் தண்டையின் உதவியுடன் கிளப்பி ஆதிசேடனின் உதவியினால் பாம்புகளை கயி-றாக்கிக் கட்டி இழுத்துப் பெயர்த்து தன் இருதோள்களிலும் சுமந்து வந்தான். பழனிக்கு அருகில் வந்ததும் களைப்பால் இரு குன்றுகளையும் கீழே வைத்து விட்டு உறங்கி எழுந்தான். ஆனால் குன்றுகள் அசையவில்லை. இந்நேரம் மொட்டந்தலையுடனும் கோவணத்துடனும் அவ்விடத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் ஒருவனிடம் குன்றுகளைப் பெயர்க்க உதவி பெறுவதற்கு அவ்விடத்தில் குடிமனை எங்காவது உண்டா என்று இடும்பன் வினாவினான். சிறுவனோ அந்தக் குன்றுகள் தன்னுடையவை என்றும் அதனை யாரும் பெயர்க்க முடியாது என்றும் உரிமை கொண்டாடி-னான். முதலில் இடும்பன் ஆத்திரமுற்றாலும் முன்னாள் நிற்பவர் தந்தைக்கு உபதேசம் செய்த பழனியாண்டவர் என்பதை உணர்ந்து மகிழ்ந்து அங்கேயே தானும் காவலுக்கு அமர்ந்து கொண்டான். இடும்பன் தோள்களில் சுமந்து வந்து முருகனுக்குப் பிரியமான

பொருளைக் கொடுத்தது போல் முரக பக்தர்களும் காவுதடியில் தங்கள் நேர்த்திப் பொருட்களைச் சுமக்கும் வழமை தோன்றியது என்பது காவடியாட்டம் தொடர்பாக தமிழர்களிடை உள்ள மரபுவழிக்கதை. கவி ஆடி என்னும் சொற்கள் இணைந்து பாட்டும் ஆட்டமும் சேர்ந்த காவடியாட்டத்திற்கு காவடி என்ற பெயர் வந்தது என்பாரும் உளர். காவடி நடனத்தில் அலங்கரிக்கப்பட்ட காவுதடியினை தோளில் சுமந்தபடி சமநிலை குலையாது தாள இசைக்கேற்ப நடனமிடுவர். முதலில் காவு தடியின் இருமருங்கிலும் கடவுளுக்கு குறிப்பாக முருகனுக்கு நேர்த்தி வைக்கப்பட்ட பொருட்களை கூடையில் வைத்து மஞ்சுள் துணியால் கட்டுவர். காவுதடியின் இருபுறமும் கால்கள் பொருத்தி காவுதடியின் இருமுனைகளையும் வளைந்த பட்டுத்துணியால் போர்த்தப்பட்ட வில்லால் இணைத்து அந்த வில்லில் மயில் தோகைகள் கட்டுவர். வில்லின் விளிம்புகளில் மணிமாலைகள் சரிகைகள் கட்டப்பட்டு அலங்கரிப்பர். பின்னர் அந்த அலங்கரிக்கப்பட்ட அந்தக் காவு தடியின் நடுப்பகுதியைத் தோளில் சுமந்த வண்ணம் காவடி நடனத்தை ஆடுவர். காவடி நடனம் ஆடுபவர்கள் நேர்த்திக்காக ஆடுகையில் வேல் செடில் போன்ற உலோக ஆயுதங்களை வாயிலும் முதுகிலும் குத்திய வண்ணம் நேர்த்தி செலுத்துவதும் வழமை. நமது தாயகத்தில் பால்காவடி எடுக்கும் வழக்கமே அதிகமாக உள்ளது. காவுதடியின் இரு நுனியிலும் பால்நிறைக்கப்பட்ட செம்புகளை மஞ்சள் துணியால் அவற்றின் வாயினைக் கட்டி தொங்கவிடுவர். இவ்வாறு பாற்செம்புகள் பொருத்தப்பட்ட காவு தடி பாற்காவடி-யெனப்படும். காவடி எடுக்கையில் பாடற்பெறும் பாடல்களில் காவடிச்சிந்து என்னும் அன்னக் காவடி செடிற்காவடி தூக்கு காவடி பறவைக்காவடி போன்ற காவடி வகைகளும் வழக்கில் உண்டு. ஆனால் பொதுவாக பாற்காவடியே பார்வைக்கு அழகாகப் பலரையும் கவரும் காவடிவகையாகும். காவடிச் சிந்து என்னும் ராகம் காவ-டியாட்டத்தின் மூலம் மக்களைக் கவர்ந்த ராகமாகும்.

## கரகாட்டம்

தலையில் புனித நீர் உள்ள குடம் ஒன்றை வைத்து இசைக்கேற்ப குடம் சரியாது சமநிலையில் நிற்குமாறு ஆடப்படும் சமநிலை நடனம் கரகஆட்டம் எனப்படும். புனித நீர் நிரப்பிய குடத்தை கரகச்செம்பு

என்று அழைப்பர். மழைவேண்டி முத்துமாரி அம்மனுக்கும் வளம் வேண்டி கங்கை அம்மனுக்கும் ஆடப்பட்ட கரகம் குடக்கூத்து என்று தொடக்கத்தில் அழைக்கப்பட்டது. ஆரம்பத்தில் விவசாயிகள் வயலில் முளைவந்த நெல்மணிகளைப் பெண்கள் தாங்கிய வண்ணமும் ஆண்கள் புனித நீரைக் கொண்ட குடத்தை தாங்கிய வண்ணமும் கரகம் ஆடியதாக வரலாறு கூறுகிறது. இன்று கோயில்களில் ஆடப்படும் ஆட்டம் ஆட்டக்கரகம் என்றும் இயற்கையின் அருள் வேண்டி நம்பிக்கையும் பக்தியும் கொண்டு ஆடப்படும் ஆட்டம் சக்திக்கரகம் என்றும் இருவிதமாக வழக்கில் உள்ளது. இன்று சக்திக்கரகம் ஆண்களால் மட்டும் ஆடப்படுகிறது. ஆண்களுடன் பெண்களும் சேர்ந்தும் ஆண்கள் தனித்தும் பெண்கள் தனித்தும் ஆடுகரகத்தினை ஆடுகின்றனர். ஆடுகரகம் தொழில் முறைக் கலைஞர்களால் ஒரு கலையாகவே முன்னெடுக்கப்படுகிறது. அதே வேளையில் தொடக்கத்தில் கரக ஆட்டம் நையாண்டி மேளத்துடனேயே ஆடப்பட்டது. ஆனால் இன்றோ பலவிதமான பாடல்களுடனும் கரகம் ஆடப்படுகிறது. ஒன்று முதல் ஒன்பது கரகச் செம்புகளுடன் கரகாட்டம் நடைபெறுவது வழமை. உடுக்கு நாதஸ்வரம் தவில் போன்ற வாத்தியங்கள் கரகாட்டத்திற்குப் பயன்படுவது வழமை. நையாண்டி மேளம் உறுமி போன்ற வாத்தியங்கள் மலையகத்தில் கரகாட்டத்தில் பயன்பட்டு மலையக மக்களின் ஊடாக ஊறணி போன்ற இடங்களிலும் பயன்படுகிறது. நையாண்டி மேளம் என்பது இரண்டு நாதஸ்வரங்கள்இ ஓர் ஒத்துஇ தவில்இ பம்பைஇ தமுக்கு போன்ற கருவிகளின் ஒலியால் எழுப்பப்படும் இசையாகும்.

மேலும் கோலாட்டம் கும்மியடித்தல் பாம்பு நடனம் மயில் நடனம் புலியாட்டம் பொய்க்கால் குதிரையாட்டம் ஆகிய பலவகையான நாட்டார் கலைகளைக் கொண்டதாகத் தமிழீழத்தின் கலைப்பரப்பு திகழ்கிறது.

## பொங்கல் விழாவும் தமிழர் வீரவிளையாட்டுக்களும்

தைப்பொங்கல் தமிழர் திருநாள். தமிழர் வாழும் இடமெல்லாம் தமிழர் பண்பாட்டின் மிகச்சிறந்த உதாரணமாய் அமைகின்ற நன்னாள் தைப்பொங்கல் பொன்நாள். சமுகவியல் பார்வையில் உலகின்

அறுவடை விழாக்களின் வரிசையில் தமிழர் கொண்டாடும் திருநாள் இந்த தைப்பொங்கல் பெருநாள். உணவு உயிர் வாழ்தலின் ஆதாரம். அதனைத் தந்திடும் இயற்கையும் அதில் இணையும் மனித உழைப்பும் என்றென்றும் போற்றப்பட வேண்டியன. அந்த வகையில் வயற்காட்டில் பாடுபடும் உழவர்களும் கூடவே அங்கு உழைக்கும் உதவும் அனைவரும் ஒன்றிணைந்து தங்கள் உழைப்புக்கு உறுதுணையாக நிற்கும் கதிரவனின் முன்னே வயல் விளைந்த முதற் புத்தரிசி கொண்டு பொங்கி மகிழ்ந்து உண்டிடும் சமூகப் பெருவிழா தைப்பொங்கல் உழவர் திருநாள். நன்றி கூறிடல் உழவர்க்கு மட்டும் தானா மற்றையத் தொழிலாளர்களுக்கு ஏன் இவ்வாறு நன்றி கூறப்படவில்லை என்பது நியாயமான கேள்வி. விவசாயப் பொருளாதாரம் தான் பொருளாதார மிகையை முதலில் தந்தது. இதனால் வயலும் வயல் சார்ந்த நிலமுமான மருதம் தமிழர் கலைகளின் பெருவிழாக்களின் அடித்தளமாக திகழ்ந்தது. ஆயினும் காலப்போக்கில் பொங்கல் விழா எல்லாத் தமிழ் மக்களுக்குமான தேசிய விழாவாகத் தமிழர் திருநாளாக தமிழர் இல்லங்கள் எங்கும் பொங்கலிட்டுக் கொண்டாடப்படுகிறது. தை முதலாம் திகதியுடன் தமிழர்களின் வருடக் கணிப்பு முறையாகிய திருவள்ளுவர் ஆண்டும் ஆரம்பமாகிறது.

தை முதலாம் திகதியும் அதற்கு முன்னும் பின்னும் உள்ள நாட்கள் தமிழர் சமுதாயத்தின் விழாக்காலமாகி இத்தினங்களில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகள் சல்லிக்கட்டு என்னும் கொம்பு சீவிய காளை மாட்டை கையால் அடக்குகின்ற போட்டிகள் போன்ற பாரம்பரியப் போட்டிகளும் கிளித்தட்டு தாச்சிமறிப்பு கிட்டிப்பொல்லு போன்ற கிராமிய விளையாட்டுக்களும் சிலம்படி தெருக்கூத்து தப்பாட்டம் உறுமியாட்டம் வில்லுப்பாட்டு போன்ற நாட்டார் கலைகளும் நடைபெறுகின்றன. தமிழர்களின் குறிப்பாகத் தமிழ்ப் பெண்களின் விளையாட்டுக்களான வசந்தன் முறுக்குப் ஊஞ்சல் விளையாட்டுக்கள் பாவை விளையாட்டுக்களென்று அழைக்கப்படும் நீர்விளையாட்டுக்கள் போன்ற பல தொன்மையான விளையாட்டுக்களும் பொங்கல் காலத்தில் மக்களிடை இடம்பெறுவது உண்டு.

பொங்கல் விழா போன்றே கல்விக்குத் தாயாக விளங்கும் வாணியின் விழாவும் சக்தி வழிபாட்டின் தொடர்ச்சியாக இன்றும் தொடரும் நவராத்திரி காலத்தில் பெருவிழாவாகக் கொண்டாடப்படும. இக்காலத்தில் பட்டிமன்றங்கள் வழக்காடு மன்றங்கள் போன்றவை மக்களைக் கவரும் அறிவியல் நிகழ்ச்சிகளாக இடம்பெறும். சுருக்கமாகச் சொன்னால் தமிழர்கள் பிறப்பு முதல் அன்பையும் பண்பையும் வீரத்தையும் கூடிவாழும் தன்மையையும் எல்லாவற்றுக்கும் மேலாக மனிதத்துவத்தையும் மனித நேயத்தையும் என்றும் போற்றும் வளர்க்கும் கலைகளையும் விழாக்களையும் விளையாட்டுக்களையும் என்றுமே தங்கள் பண்பாடாகக் கொண்டு திகழ்கின்றனர். நாம் இப்படி வாழ்ந்தோம் வாழ்கின்றோம் வாழவேண்டும் என்று நம் இளையவர்களுக்கும் மற்றவர்களுக்கும் சொல்லிக்கொடுப்பது தான் பண்பாடு. இதனை உணர்ந்து தமிழ்ப்பண்பாட்டை கலைகள் விழாக்கள் விளையாட்டுக்கள் மூலம் வளர்த்த நம் முன்னோரின் சிறப்பே சிறப்பு.



**வன்னியை ஆண்ட கடைசி தமிழ் மன்னன்**
**பண்டார வன்னியன்**

# தமிழர் வீரத்தின் விளைநிலம் வன்னி

தாய்த்தமிழீழத்து வீரமண் -அடங்காப்பற்றென்று வரலாறுபாடும் வன்னிமண். போர்ப்பறை ஓசையும் யானைகள் பிளிறலும் பகைவர் கால்களை நடுங்க வைத்தமண். படைபல கொண்ட ஆங்கிலக் காலன-ித்துவம் அஞ்சி நடுங்கிட இறையாண்மை செய்த பண்டார வன்னியன் இறுதி மன்னனாய் வாழ்ந்த மண். அவன் ஆட்சி முடிந்ததாய் பிரித்தானிய காலனித்துவாதிகள் நட்ட நடுகல்லுக்கு-அக்டோபர் 31 2004 உடன் இருநூறாண்டுகள் நிறைவுற்றது. இந்நிலையில் குலசேகரம் வைரமுத்துப் பண்டார வன்னியன் நினைவாய்ச் சில தகவல்களையாவது நாம் தெரிந்து கொள்வது எங்களின் தாயகத்தினை தேசியத்தினை தன்னாட்சியைக் காத்திட நம் முன்னோர்கள் எடுத்த முயற்சிகளின் தன்மையை நாங்கள் சரிவரப் புரிந்து கொள்ள உதவும். வடக்கே ஆனையிறவுப் பரவைக்கடலையும் தெற்கே நுவரகலாவெவ என்றழைக்கப்படும் அநுாரதபுரத்தையும் கிழக்கே முல்லைத்தீவு திருகோணமலை ஆகிய இடங்களை அண்டிய இந்துசமுத்திரக்கடற்பரப்பையும் மேற்கே மன்னார் கடலையும் எல்லைக-ளாகக் கொண்ட பிரதேசம் வன்னிப்பிரதேசம் எனப்படுகிறது. வரலாற்று உதயகாலத்தில் வாழ்ந்த இலங்கையின் ஆதிக்குடிகளான வேடர்களும் இராட்சதர்கள் என அழைக்கப்பட்ட இராவணனின் வழிவந்த சிவ-வழிபாட்டைக் கொண்டவர்களும் பின்னர் தமிழ் பௌத்தர்களும் வன்னியின் ஆதிக் குடிகளாக கருதப்படுகின்றனர். பின்னர் தமிழ் சிங்கள அரசுக்கள் உருவானபோது இலங்கை பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டது. சிங்கள தமிழ் அரசுக்களுக்கு அடங்காது சுதந்திரத்துடன் காணப்பட்ட இந்தப் பற்று அடங்காப்பற்று என வரலாற்றாசிரியர்களால் குறிக்கப்பட்டது.

கிறிஸ்துவுக்குப் பின் 5ம் 6ம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவில் இருந்து குளக்கோட்ட மன்னனின் மகனுடன் வந்த 60 வன்னியர்களில் 59 பேர் அடங்காப்பற்றுப் பிரதேசத்திற்குச் சென்று பனங்காமத்தை இராஜதானியாகக் கொண்டு அதனை ஆட்சி செய்தனர். இந்நேரத்தில் ஏழு வன்னிமைகள் காணப்பட்டனவெனவும் அவை பனங்காமம் முள்ளியவளை கருநாவல் பத்து தென்னமரவடி மேல்பத்து கரிக்கட்டுமூலை செட்டிக்குளப்பத்து என யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. தமிழகத்தில் இருந்து வந்த வன்னியர்கள் தாயகத்தில் வாழ்ந்து வந்த பூர்வீக குடிகளை அடக்கி ஆளத் தொடங்கிய பின்னர்

வன்னி என்றால் வன்னியர் நாடு என்ற நிலை தோன்றியது. வன்னியர்களாலும் சுதேச மக்களை அடக்கியாள முடியாத நிலையில் தமிழகத்தில் உள்ள ஆட்சியாளர்களிடம் உதவி கோரினர். திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த வரசிங்க ஆராச்சி முல்லை மலனார் சரகுமலனார் சிவ்வை மலனார் ஆகியோருடன் முள்ளியவளைக்கு வந்து அங்கு குளங்களைத் திருத்தி ஆட்சி செய்ததாகவும் இவருக்குப் பின்னரே நந்திக்கடல் என்ற பெயர் வந்தது என்று வன்னி குறித்த ஆய்வுநல்களை எழுதிய அருணா செல்லத்துரை தமது அடங்காப்பற்று பண்டார வன்னியன் வரலாறு என்ற நூலில் கூறுகின்றார்.
அத்துடன் இவர் மதுரையில் இருந்து வந்த வேளாளர்கள் இளஞ்சிங்க மாப்பாணன் தலைமையில் முல்லைத்தீவில் இருந்த பூர்வீக குடிகளை அடக்கி ஆட்சி செய்தனர் எனவும் பின்னர் வன்னியர் ஆண்ட இடத்திற்கு வன்னியென்னும் பெயரையும் அவ்வன்னியரை அடக்கி வன்னியைக் கைக்கொண்ட வேளாளர் வன்னியனார் எனவும் அழைக்கப்பட்டதாக மிக நுணுக்கமாக எடுத்து விளக்குகிறார்.அத்துடன் மதுரையில் இருந்து வந்த 60 வன்னியர்களில் 54 பேர் அடங்காப்பற்று மக்களுடன் நடந்த போர்களில் இறந்து போனதாகவும் மிகுதியாக இருந்த 5 பேரும் வன்னியை ஐந்தாகப் பிரித்து ஆண்டதாகவும் ஒருவன் கண்டிக்கு திசாவையாகச் சென்றுவிட்டதாகவும் யாழப்பாணவைபவமாலை கூறுகிறது. மற்றைய ஐந்து பேரும் இளஞ்சிங்க மாப்பண்ணனிடம் வன்னிப்பாதுகாப்பை ஒப்படைத்து மதுரைக்குத் தங்கள் மனைவிமாரைப்பார்க்கச் சென்றதாகவும் அந்நேரம் கடலில் திமிங்கலம் அவர்கள் சென்ற கப்பலைக் கவிழ்த்து விட்டதினால் அவர்கள் இறக்க மாப்பண்ணர்பரம்பரையிடம் வன்னியின் ஆட்சி சென்றதாகக் கருதப்படுகிறது. அதே வேளை தங்கள் கணவன்மாரைத் தேடி வந்த ஐந்து மதுரை வன்னிச்சிமாரும் தங்கள் கணவன்மாரைக் காணாது அன்று செல்விவாய்க்கால் என்றும் இன்று முள்ளிவாய்க்கால் என்றும் அழைக்கப்படும் இடத்தில் தீ மூட்டித் தாங்கள் உயிர்துறந்தனர். இவர்களையே அப்பிரதேச மக்கள் நாச்சிமார் என வழிபடத் தொடங்கியதாகவும் கூறப்படுகிறது. மேலும் 1987ல் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமை முல்லைத்தீவுப்பகுதியை மையமாகக் கொண்டு செயற்படத் தொடங்கியதை அடுத்து வன்னிப்பிரதேசம் வன்னிப் பெருநிலப்பரப்பு எனப்படுகிறது.

வன்னி என்ற தமிழ்ச் சொல்லுக்கு அக்கினி நெருப்பு என்று பொருள். திருமூலர் திருமந்திரத்தில் வன்னி என்ற சொல் நெருப்பு என்ற

சக்தியைக் குறிப்பதைப் பலமுறைகளில் சுட்டிக்காட்டுகிறார். நெருப்பனைய வீரர்கள் வன்னியர்கள் எனப் பெயர்பெற்றனர். திருமந்திரப்பாடல் ஒன்று

வன்னி யெழுந்தவை மாபலம் உள்ளன
வன்னி யெழுந்தவை வானுற ஓங்கின
வன்னியெழுந்தவை மாபெருஞ் சக்கரம்
வன்னியெழுந்திடுவாறது சொல்லுமே

என அமைகிறது. இங்கு வன்னி என்பது நெருப்பு என்னும் பொருளில் கையாளபப்டுகிறது. வன்னி என்றால் நெருப்பு. அவ்வாறே நெருப்பனைய வீரமுள்ள எங்கள் முன்னோர் வன்னியர் எனப்பட்டனர். அவர் கன்னியர் கூடக் களமாடிக் காவியம் படைத்த செல்விகள். உறுதி உறுதி உறுதி உறுதிக்கோர் உடைவுண்டாயின் இறுதி இறுதி இறுதி என்று கற்புடைப் பெண்டிராய் தமிழுலகு தொழுதிட வாழ்ந்த வரலாற்று நாயகிகள் வன்னிக் குலக் கொடிகள் நாச்சிமார் என வணக்கப்பட்டமை எம் வரலாறு. இந்த எங்கள் வீரத் தாய்க்குலத்தின் நினைவாக பனங்காமத்து வன்னிச்சிகள் பிரித்தானியர்களின் டிறிபெக் கோட்டையை கரந்தடித் தாக்குதலால் தாக்கியழித்த வரலாறு உட்பட பல வரலாறுகள் அவர்கள் சிறுநிலப்பரப்பின் தலைவிகளாய்த் தாயகம் காத்த வரலாற்றைக் குறித்துப் பேசுகின்றன. பண்டார வன்னியனின் காதலியாகத் திகழ்ந்து மன்னன் மாவீரனான செய்தி கேட்டதுமே கார்த்திகைக் காய் உண்டு கற்புடைச் செல்வியாகிய பொற்புடைக் குருவிச்சி நாச்சியார் கதை வன்னிப் பெண்களின் பெருமை பேசும் வன்னிக்காவியம். அன்னையர் வீரம் தம்மவர் உள்ளத்து உறுதியாகக் கொண்டெழுந்த வன்னியின் இறுதிச் சிற்றரசன் குலசேகரம் வைரமுத்துப் பண்டார வன்னியன் - டச்சுக்காரருக்கும் சூரியன் அஸ்தமிக்காத பிரித்தானிய காலனித்துவ அரசுக்கும் எதிராக தாயகம் காத்து நின்ற மாவீரன் மன்னன் பண்டார வன்னியன் - கற்சிலை மடுவில் 1803ம் ஆண்டு அக்டோபர் 31ம் நாள் கப்ரன் வொன் டிறிபேர்க்கால் தோற்கடிக்கபப்ட்டான் என்று ஒரு கல்வெட்டை 1904ம் ஆண்டுக்கும் 1905ம் ஆண்டுக்கும் இடையில் முல்லைத்தீவுக்கு உதவி அரசாங்க அதிபராக இருந்த ஆர் ஜி வெஸ்ரிங் கற்சிலை மடுவில் உள்ள புளியமரமொன்றின் கீழ் நட்டுவைத்துள்ளார். ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதியில் ஒட்டுச்சுட்டானில் இருந்து இரண்டரை மைல் தூரத்தில் உள்ள கற்சிலை மடுவில் உள்ள புளியமரமொன்று வன்னி மக்களால் பண்டாரவன்னியன் மரமென அழைக்கப்பட்டு வந்தது. இந்த மரம் நூறுஆண்டுகால பழமை வாய்ந்த மரமாக காணப்பட்டதால்

கற்சிலை மடுவில் பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டான் என்ற பிரித்தானியரின் குறிப்பின் அடிப்படையில் பண்டாரவன்னியனின் வீழ்ச்சி குறித்த நடுகல்லை இங்கு ஆர் ஜி வெஸ்ரிங் நட்டு வைத்தார். ஆயினும் பண்டாரவன்னியன் இறுதியில் என்னவானான் என்பது யாருக்குமே சரி-வரத் தெரியாத வரலாறாகவே உள்ளது. மக்களிடை நிலவும் கதைக-ளின்படி முல்லைத்தீவில் 1803ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற சண்டையில் பண்டாரவன்னியன் பிரித்தானியத் தளபதி டிறிபேர்க்கை நிராயுதபாணியாக்கினான் எனவும் பின்னர் நிராயுதபாணியாக உள்ள ஒருவரைக் கொல்லல் கூடாது என்ற யுத்ததர்மத்தின் அடிப்படையில் அவரைத் தப்பியோட அனுமதித்ததாகத் தெரிகிறது. பின்னர் மீளவும் 1803 அக்டோபர் 31ம் நாள் கப்டன் டிறிபேர்க் கற்சிலை மடுவை சுற்றி வளைத்த நேரம் பாரிய தாக்குதலை நடாத்தி ஆளணிச் சேதத்தை எற்படுத்தாது பண்டாரவன்னியன் காட்டிக் கொடுத்த யுத்த தர்மத்தின் அடிப்படையில் பண்டாரவன்னியனை நேரடி வாட்சண்டைக்கு குதிரையில் இருந்தபடி அழைத்ததாக கூறப்படுகிறது. இந்தச் சண்டையில் கப்டன் டிறிபேர்க் குதிரையில் வீழ்ந்ததும் தான் வெற்றிபெற்றதாகவும் வன்னியர் வீரம் நிலைநாட்டப்பட்டதாகவும் கருதிய பண்டாரவன்னியன் அங்கிருந்து புறப்பட்டு காட்டுக்குள் கரந்து வாழ்ந்து கரந்தடித் தாக்குதல்களை நடாத்தத் தொடங்குகிறான். அதுமட்டுமல்ல பிரித்தானியர்களிடம் இருந்து பறித்த முச்சக்கர வண்டிகளில் பொருத்தப்பட்ட மூன்று பீரங்கிகளையும் மற்றும் ஆயுதங்களையும் பண்டாரவன்னியன் தன்னுடன் கொண்டு சென்றிருந்தான். 1811வரை பல்வேறு கரந்தடி தாக்குதல்களை நடாத்தி தாயக இறைமையை மீளப்பெற முயன்று வந்த பண்டாரவன்னியன் 1811ல் உடையாவூரில் இருந்து நடாத்திய கரந்தடித் தாக்குதலில் காயமுற்று அன்று மாலையே இறந்ததாக நம்பப்படுகிறது. பண்டாரவன்னியனின் மரணச் செய்தி கேட்டவுடன் அவனின் காதலி குருவிச்சை நாச்சியாரும் தோழியும் கார்த்திகைக் கிழங்கை அரைத்துத் தின்று தாங்களும் மரணத்தைத் தழுவிக்கொண்டனர். தமிழீழத் தாயின் இறுதிச் சிற்றரசனின் வரலாறு இவ்வாறாக முடிவடைகிறது. பண்டாரவன்னியனின் வீழ்ச்சியின் தொடர்ச்சியாக சிங்கள அரசான கண்டியும் 1815ல் வீழ்ச்சியுற்று முழுஇலங்கையுமே பிரித்தானியரின் வசமாகியது. சிங்கள தமிழ் தேச இனங்கள் தன்னாட்சிகளுடன் விளங்கிய நேரத்தில் இலங்கை முழுவதையும் வெற்றி கொள்ள முடியாது 1505 முதல் 1815 வரை 310வருடங்கள் வரை தவித்த காலனித்துவ வாதிகள் 1815ல் சிங்கள தமிழ் தனியரசுக்களின் வீழ்ச்சியின் பின்னர் இலகுவாக இலங்கை முழுவதையும் கைப்பற்றிக் கொண்டனர்.

Since 1st July 1992, Arunaudhayam Tamil School for Tamil Language and Cultural Studies has been based at the Trinity Methodist Church Youth Center Plumstead. This school started with seven students in 1992 and today large number of Tamil families around Plumstead send their children for their Tamil Language and Cultural Studies to this school. Under our head teacher Mrs. Indiranee Fernando's guidance and our teachers' excellent commitment, the school now teaches Tamil Language, Carnatic Music, Baratha Natiyam, Miruthangam and Veena classes every Wednesday evening. The increase in population of Tamils in the London Boroughs need to be in contact with schools for their children to teach history, culture and traditions of Sri Lankan Tamils. This is important because in the social policy and national curriculum, Tamils from Sri Lanka are included with that of Indian origins. Due to this the individuality of Tamils from Sri Lanka is hidden not only for Tamil students but also in the eye of the world community.

Therefore with the grant support from SELF we organised a course for our children to introduce the history, culture and traditions of Tamils from Sri Lanka. After the course we are publishing this book – Tamils from Sri Lanka's History, Culture and Traditions – for the reading purpose of Tamil children, parents and teachers. We believe the historical and cultural knowledge gained from this book will help our students to be able to explain the richness of their language and culture to other community members, in order to promote and value diversity and encourage social inclusion of all communities.

We wish to congratulate our teacher Rita Fatimaharan and the assistants for this project Mrs Chitra Yogarajah and Mrs Marina Vethanayagam for their service rendered in the success of the project and book. Also we wish to thank the Administrator of the Trinity Methodist church for their hall facilities to conduct the classes and the JR printer for their quality printing. We hope this book could develop the interest of Tamil Children from Sri Lanka towards their country's history and fulfill their thirst for cultural identities.

Management Committee
Arunaudhaya



# இலங்கைத் தமிழர்கள்
# வரலாறு கலாச்சாரம் பாரம்பரியம்

# Tamils From Sri Lanka
# History Culture and Tradition


## நீற்றா பற்றிமாகரன்

BA BSc P.G.Diploma (Social Policy) P.G. Diploma (Housing)



## Aruna Udhayam

**Tamil School Publication**
**Trinity Youth Club, Burrage Road,**
**Plumstead**
**London SE18 7JW**
**United Kingdom**
**2005**

Printed by JR PRINT London Tel: 020 8503 6643